# கணக்கீடு

## ஆசிரியர் வழிகாட்டி

### கல்விப் பொதுத் தராதரம்
### (உயர்தரம்)

Draft

# தரம் - 12

**(2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கானது)**

**வணிகக் கல்வித் துறை**
**விஞ்ஞான தொழினுட்பப் பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**
**www.nie.lk**

**தேர்ச்சி 1.0:** கணக்கீட்டினையும் அதன் முக்கியத்துவத்தையும் பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.1:** நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை எடுப்பதற்குக் கணக்கீட்டுத் தகவல்கள் முக்கியத்துவம் பெறும் முறையினைப் பகுப்பாய்வு செய்வார்.

**பாடவேளைகள்:** 02

**கற்றற் பேறுகள்:**

- கணக்கீட்டினை விளக்குவார்.
- கணக்கீட்டின் நோக்கங்களைத் தெளிவுபடுத்துவார்.
- நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களைப் பெயரிட்டுக் காட்டுவார்.
- நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான தகவல்களை அட்டவணைப்படுத்துவார்.
- கணக்கீட்டின் வகைகளைச் சுட்டிக்காட்டி அவ்வகைகளைத் தெளிவுபடுத்துவார்.

Draft

**பிரதான பதங்களும் எண்ணக்கருக்களும்:**

**எண்ணக்கருப்படம் (Concept Map)**




**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**பிரவேசம்:**

- "கஜமுகன் - Com" வணிகத்தின் தகவல்களை பொருத்தமானவாறு மாணவர்களுக்கு முன்வைக்கவும்.

**“கஜமுகன் - Com”**

கஜமுகன் ரூபா 200 000 மூலதனமாக இட்டு தொடர்பாடல் சேவையை வழங்கும் நிறுவனமொன்றை ஆரம்பித்தார். இந்நிறுவனத்திற்குரிய சகல தகவல்களும் பின்வருமாறு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளன.

- கடன் கொடுக்கல் வாங்கல்கள் - கடன் ஏடுகளில் பதிவு செய்தல்.
- உடன் காசுக் கொடுக்கல் வாங்கல்கள் - தற்காலிக காசுப் புத்தகத்தில் பதிவு செய்தல்.
- வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்களை புறம்பான ஏட்டில் பதிவு செய்தல்.

இரு வருடங்களின் பின்னர் வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற துலங்கல்களுக்கேற்ப கஜமுகனிடம் வணிகத்தை விரிவுபடுத்துவதற்கான எண்ணமொன்று ஏற்பட்டது. இதற்காக ரூபா 150 000 தொகையான நிதித்தேவையொன்று ஏற்பட்டுள்ளதுடன், அதனை வங்கிக் கடனொன்றின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு அவர் எண்ணியுள்ளார். இக்கடனைப் பெற்றுக் கொள்வதற்கு கடந்த அண்மிய இரு வருடங்களுக்குரிய கணக்கறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு வங்கி அறிவித்துள்ளது.

இவ்விடய ஆய்விலிருந்து பெற்றுக் கொண்ட தகவல்களினூடாகப் பின்வரும் காரணங்களை வெளிப்படுத்தி மாணவர் கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.

- வணிகமொன்றில் நிதி, நிதியல்லாத கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன என.
- வணிகத்தின் மீது அக்கறை கொள்ளும் பல்வேறு பிரிவினர்கள் காணப்படுகின்றனர் எனவும், அவ்வாறு அவர்கள் அக்கறை கொள்வதற்கான காரணங்களும் காணப்படுகின்றன என.
- கணக்கீடு என்பது நிதிக் கணக்கீடு, முகாமைக் கணக்கீடு என இரு வகைகளாக வகைப்படுத்தப்படுமென.
- நிதி, முகாமைக் கணக்கீட்டுச் செயன்முறைகள் காணப்படுகின்றதென.
- நிதி, முகாமைக் கணக்கீடுகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றதென.
- அக்கறையுடைய செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குவது கணக்கீட்டின் நோக்கமாகுமென.
- ‘‘கணக்கீடு’’ என்றால் என்ன என்பது தொடர்பில் எளிமையான விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ள முடியுமென.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவும்.
- பின்வரும் வினாக்கொத்தினைத் தயாரித்துக் கொள்ளவும்.
  - (1) கணக்கீடு என்றால் என்ன என்பதை சுருக்கமாக அறிமுகப்படுத்தவும்.
  - (2) கணக்கீட்டின் நோக்கம் என்ன?
  - (3) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் நான்கு பிரிவினர்களின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.
  - (4) பின்வரும் பிரிவினர்கள் வணிகத்தின் மீது அக்கறை கொள்வதற்கான காரணங்கள் தலா ஒன்று வீதம் குறிப்பிடவும்.
    - (அ) உரிமையாளன் / உரிமையாளர்கள்
    - (ஆ) வங்கி

Draft

(5) கணக்கீட்டின் வகைகளைப் பெயரிட்டுக் காட்டுக.
(6) நிதிக் கணக்கீடு என்றால் என்ன?
(7) நிதிக் கணக்கீட்டுச் செயன்முறைகளைப் பெயரிட்டுக் காட்டுக.
(8) முகாமைக் கணக்கீடு என்றால் என்ன?
(9) முகாமைக் கணக்கீட்டின் செயன்முறைகளைப் பெயரிட்டுக் காட்டுக.
(10) நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் நான்கினைக் குறிப்பிடுக.
(11) நிதி அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் இரண்டினை முன்வைக்குக.
(12) நிதிக் கணக்கீட்டுக்கும் முகாமைக் கணக்கீட்டுக்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக. (இது தொடர்பான விடய ஆய்வு / ஆய்வுகளை ஆசிரியரினால் தயாரித்துக் கொள்ள வேண்டும்.)

- வினாக்களை எழுமாற்றாகத் தெரிவு செய்வதற்குக் குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கவும். (வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு வினாக்களை கேட்குமாறு மாணவர்களுக்குத் தெரிவிக்கவும்.
- தெரிவு செய்த வினாவினை அக்குழுவிற்கு பகிரங்கமாக முன்வைக்கச் செய்யவும்.
- சரியான விடையைப் பெற்றுக் கொள்ளப்படின் 01 புள்ளியினை வழங்குவதுடன், பிழையான விடை அளிக்கப்படும்போது அவ்வினாவினை அடுத்த குழுவிற்கு வழங்கவும். அவர்கள் சரியான விடை அளித்தால் 01 புள்ளி வழங்கவும்.
- இம்முறைக்கமைய இரு குழுக்களுக்கும் வினாக்களை முன்வைப்பதுடன் சரியான விடைகளுக்குப் புள்ளி வழங்கவும்.
- மாணவர்கள் சரியான விடையை அளிக்கத் தவறும் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் சரியான விடையை முன்வைக்கவும்.

Draft

**பாடவிடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான வழிகாட்டல்கள்:**

- வெவ்வேறு நிறுவனங்கள் கணக்கீடு என்றால் என்ன என்பது பற்றிப் பின்வருமாறு வரைவிலக்கணங்களை வழங்கியுள்ளன.

**அமெரிக்க கணக்கீட்டுச் சங்கம் (American Accountancy Association):**
"தகவல்கள் தேவைப்படும் பிரிவினர்கள் தீர்மானங்கள் / முடிவுகளை எடுப்பதற்கு ஏற்றவாறு பொருளாதாரத் தகவல்களை இனங்காணல், அளவீடு செய்தல், தொடர்பாடல் செய்யும் செயன்முறையே கணக்கீடாகும்."

**அமெரிக்க சான்றுபடுத்திய பொதுக் கணக்காளர் நிறுவனம்:**
**(American Institute of Certified Public Accountants)**
"நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் என்பவற்றை விசேட முறையில் பணமெனும் சாதனத்தினைப் பயன்படுத்தி பதிவு செய்வது, வகைப்படுத்துவது, பொழிப்பாக்குவது, பகுப்பாய்வு செய்வது, தொடர்பாடல் செய்வது, அச்செயற்பாட்டினால் எழுந்த பெறுபேறுகளை வியாக்கியானம் கூறுவதுமான கலை கணக்கீடு ஆகும்."

முதலாவது வரைவிலக்கணம் தொடர்பாக கவனஞ் செலுத்துவோமாயின், அது கணக்கீடு தொடர்பான பொதுவானவொரு வரைவிலக்கணமாகும். இரண்டாவது வரைவிலக்கணத்தில் நிதிக் கணக்கீடு தொடர்பான அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட இரு வரைவிலக்கணங்கள் தொடர்பாகவும் விளக்கங்களைப் பெற்ற பின் கணக்கீடு என்றால் என்னவென்பதற்குப் பொதுவான வரைவிலக்கணமொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

**“அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை எடுப்பதற்குக் கணக்கீட்டு அலகொன்றிற்குரிய பொருளாதாரத் தகவல்களை வழங்கும் முழுமையான செயன் முறையே கணக்கீடாகும்.”**

பொருளாதாரத் தகவல்கள், கணக்கீட்டு அலகு, கணக்கீட்டுச் செயன்முறை, அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் மற்றும் அவர்களினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் என்பன வற்றை இவ் வரைவிலக்கணத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

**கணக்கீட்டின் நோக்கம்:**

‘‘கணக்கீட்டு அலகுகள் தொடர்பில் அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான பொருளாதாரத் தகவல்களைத் தொடர்பாடல் செய்வது’’ கணக்கீட்டின் பிரதான நோக்கமாகும்.

**கணக்கீட்டு அலகு என்பது தனிநபர், வணிக அமைப்புக்கள், அரசு அல்லது எந்தவொரு நடவடிக்கையொன்றாகவும் இருக்கலாம். இங்கு நிதிசார் தகவல்களே பொருளாதாரத் தகவல்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன.**

**உதாரணம்:-**

- வணிகத்தின் நிதியாண்டுக்கான இலாபம் ரூபா 200 000 ஆகும்.
- வணிகத்தின் மொத்த சொத்துக்கள் ரூபா 2 000 000 ஆகும்.
- வணிகத்தின் மொத்த பொறுப்புக்கள் ரூபா 500 000 ஆகும்.

**அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை எடுப்பதற்கு மிக முக்கியமாக அமைகின்ற பணத்தினால் அளவிடப்படமுடியாத (நிதிசாரா) தகவல்களும் உள்ளன.**

**உதாரணமாக:**

- நிறுவன ஊழியர்கள் எண்ணிக்கை 500 பேர்களாவர்.
- தரத்திலும் பண்பிலும் உயர்ந்த பொருட்களை விற்பனை செய்வதன் காரணமாக வணிகம் தொடர்பில் பொது மக்களிடம் சிறந்த துலங்கல் காணப்படுகின்றது.
- ஊழியர்களை ஊக்குவிக்கும் சிறந்த வேலைச் சூழலொன்று நிறுவனத்தினுள் காணப் படுகின்றது.

நிறுவனத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினர்கள், அவர்கள் அக்கறை செலுத்தும் தகவல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| அக்கறை செலுத்தும் பிரிவினர் | அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்குத் தேவையான தகவல்கள் |
|---|---|
| (1) உரிமையாளன் / உரிமையாளர்கள் | • முதலீட்டுக்கு ஏற்ற / திருப்திகரமான அனுகூலம் கிடைக்கப் பெற்றுள்ளதா?<br>• மேலும் முதலீடு செய்யப்பட வேண்டுமா? |
| (2) முகாமையாளர்கள் | • திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா?<br>• எதிர்கால அபிவிருத்திக்கு எடுக்கவேண்டிய தீர்மானங்கள் / திட்டங்கள் எவை? |

Draft

| அக்கறை செலுத்தும் பிரிவினர் | அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்குத் தேவையான தகவல்கள் |
|---|---|
| (3) ஊழியர்கள் | • தொழில் பாதுகாப்பு காணப்படுகின்றதா?<br>• சம்பளத்தை அதிகரிக்கக்கூடிய இயலுமை நிறுவனத் திற்கு காணப்படுகின்றதா? |
| (4) அரச நிறுவனம்<br>**உதாரணம்:** உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | • உரியவாறு வரிகள் செலுத்தப்படுகின்றனவா?<br>• தேவையான அறிக்கைகள் உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றனவா? |
| (5) வாடிக்கையாளர்கள் | • நியாயமான விலையில் தரமான உற்பத்திகள் விநியோகம் செய்யப்படுகின்றனவா?<br>• பொறுப்பு உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்கான சிறந்த நிலைப்பாடு வணிகத்திற்குள்ளதா? |
| (6) கடன்கொடுத்தோரும் கடன் வழங்கும் நிறுவனங்களும் | • வழங்கப்பட்ட கடனை மீளப் பெற்றுக் கொள்ள முடியுமா?<br>• மேலும் கடனைச் செலுத்துவதற்கு நிறுவனம் இயலுமை உடையதா? |

Draft

**கணக்கீட்டின் வகைகள்:**

கணக்கீட்டுத் தகவல்களைப் பயன்படுத்தும் பிரிவினர்களுக்கு ஏற்ப கணக்கீட்டினைப் பிரதானமாக இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

**கணக்கீடு**

**நிதிக் கணக்கீடு**

கணக்கீட்டு அலகொன்றின் கடந்த கால கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளுக் குரிய தகவல்களை பொருளாதார ரீதியான தீர்மானங்கள் மேற்கொள்வதற்குப் பொருத்தமான முறையில் ஒழுங்கமைத்து வெளியகப் பிரிவினர்களுக்கு முன்வைப்பது நிதிக் கணக்கீடாகும்.

**முகாமைக் கணக்கீடு**

நிறுவனமொன்றின் அனைத்து முகாமைத் துவ மட்டங்களுக்கும் தேவையானவாறு திட்டமிடல், கட்டுப்படுத்தல், பொறுப்புக் கூறல் என்பவற்றை மேற்கொள்ளக்கூடிய வாறு நிதி, நிதியல்லாத தகவல்களை வழங்குவது முகாமைக் கணக்கீட்டின் கருமங்களாகும்.

**நிதிக் கணக்கீட்டின் செயன்முறைகள்:**

**உள்ளீடு** → **செயன்முறை** → **வெளியீடு**

**உள்ளீடு:** கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும்

**செயன்முறை:** இனங்காணலும் அளவிடுதலும் → பதிவு செய்தல் → வகைப்படுத்தல் → பொழிப்பாக்கல் → பகுப்பாய்வு செய்தல்

**வெளியீடு:** நிதிக்கூற்றுக்கள்

**முகாமைக் கணக்கீட்டின் செயன்முறைகள்:**

Draft

**உள்ளீடு** → **செயன்முறை** → **வெளியீடு**

**உள்ளீடு:** வரலாற்றுத் தகவல்கள், எதிர்வு கூறல் தகவல்கள்

**செயன்முறை:**

- திட்டமிடல்
- வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.
- கட்டுப்படுத்தல்

**வெளியீடு:**

- வரவு செலவுத் திட்டம் / பாதீடு
- கணக்கீட்டு விகிதங்கள்
- பொதுமேந்தலைப் பகிர்வுக்கூற்று
- எல்லைக்கிரயம் தொடர்பான தகவல்கள்
- முதலீட்டுத் தீர்மானமெடுப்பதற்கான தகவல்கள்

**நிதிக் கணக்கீட்டிற்கும் முகாமைக் கணக்கீட்டிற்குமிடையிலான வேறுபாடு:**

| நிதிக் கணக்கீடு | முகாமைக் கணக்கீடு |
|---|---|
| 1. வரலாற்றுத் தகவல்கள் மாத்திரம் பயன்படுத்தப்படும். | 1. வரலாற்று மற்றும் எதிர்வு கூறல் தகவல்கள் பயன்படுத்தப்படும். |
| 2. உள்ளக, வெளியகப் பிரிவினர்களுக்குத் தகவல்கள் வழங்கப்படல். | 2. உள்ளகப் பிரிவினர்களுக்கு மாத்திரம் தகவல்கள் முன்வைக்கப்படும். |
| 3. குறிப்பிட்ட கணக்காண்டு காலத்திற்கான தகவல்கள் ஒரு தடவை முன்வைக்கப் படல். | 3. முகாமைக்குத் தேவையான சந்தர்ப்பங் களின்போது தகவல்கள் முன்வைக்கப் படும். |
| 4. கணக்கீட்டு எண்ணக்கருக்கள், சட்ட திட்டங்கள், மரபுகள், கணக்கீட்டு நியமங்கள் என்பன பயன்படுத்தப்படும். | 4. கணக்கீட்டு எண்ணக்கருக்கள், சட்ட திட்டங்கள், கணக்கீட்டு நியமங்களுக்கு உரியதன்று. |

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

- கணக்கீடு என்றால் என்ன என்பதை விளக்குவார்.
- கணக்கீட்டின் நோக்கங்களைக் குறிப்பிடுவார்.
- வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்குத் தேவையான தகவல்களைக் குறிப்பிடுவார்.
- வழங்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளை நிதி சார்ந்தவை, நிதிசாராதவை என வேறுபடுத்திக் காட்டுவார்.
- நிதிக் கணக்கீட்டிற்கும் முகாமைக் கணக்கீட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை முன்வைப்பார்.

| **பிரதான பதங்கள்** | මූලික පද | **Key terms** |
|---|---|---|
| அக்கறையுள்ள தரப்பினர் | ඇල්මැති පාර්ශ්වයන් | Stake holders |
| நிதிக் கணக்கீடு | මූල්‍ය ගිණුම්කරණය | Financial accounting |
| முகாமைக் கணக்கீடு | කළමනාකරණ ගිණුම්කරණය | Management accounting |
| கணக்கீட்டின் நோக்கம் | ගිණුම්කරණයේ අරමුණ | Objective of accounting |
| கணக்கீட்டின் வகைகள் | ගිණුම්කරණයේ ප්‍රභේද | Types of accounting |
| கணக்கீட்டு உள்ளீடுகள் | ගිණුම්කරණ යෙදවුම් | Accounting inputs |
| கணக்கீட்டு வெளியீடுகள் | ගිණුම්කරණ නිමවුම් | Accounting outputs |
| கணக்கீட்டுச் செயன்முறை | ගිණුම්කරණ ක්‍රියාවලිය | Accounting process |

Draft

**தேர்ச்சி 1.0:** **கணக்கீட்டினையும் அதன் முக்கியத்துவத்தையும் பகுப்பாய்வு செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2:** **கணக்கீட்டுச் சூழல் காரணிகளின் மாற்றங்களினடிப்படையில் கணக்கீட்டில் மாற்றங்களும் போக்குகளும் இடம்பெறுகின்ற முறையினைப் பகுப்பாய்வு செய்வார்.**

**பாடவேளைகள்:** 02

**கற்றற் பேறுகள்:**

- கணக்கீட்டுச் சூழலை விளக்குவார்.
- கணக்கீட்டுச் சூழல் காரணிகளைப் பெயரிட்டு விளக்குவார்.
- கணக்கீட்டுச் சூழல் காரணிகளின் மாற்றங்கள் கணக்கீட்டுச் செயன்முறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையினைச் சுட்டிக் காட்டுவார்.

**பிரதான பதங்களும் எண்ணக்கருக்களும்:**

Draft

**எண்ணக்கருப்படம் (Concept Map)**



**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**பிரவேசம்:**

- பாடசாலைச் சூழலுக்குரிய காரணிகள் தொடர்பாக மாணவர்களிடம் கேட்டறிந்து பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலை நடத்தவும்.
  - வணிகத்தைப் போன்றே கணக்கீட்டிற்கும் சூழலொன்று காணப்படுகின்றது.
  - பின்வரும் சூழல் காரணிகள் வணிகங்களின் கணக்கீட்டில் தாக்கம் செலுத்துகின்றன என,
    - பொருளாதார, அரசியல் சூழல்
    - நுட்ப மற்றும் தொழில்சார் சூழல்
    - சட்டச் சூழல்
    - சமூக கலாசாரச் சூழல்
    - தொழினுட்பச் சூழல்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**

- கணக்கீட்டுச் சூழல் காரணிகளையும் மாறிகளையும் உள்ளடக்கிய 1.2.1 வரைபடத் தினை ஒரு மாணவருக்கு ஒன்று வீதம் பெற்றுக் கொடுக்கவும்.
- கணக்கீட்டுச் சூழல் காரணிகளையும் அதற்குரிய மாறிகளையும் உள்ளடக்கிய வரைபடம் தொடர்பில் சிறந்த விளக்கத்தை பெற்றுக் கொள்வதில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- வரைபடத்தில் வழங்கப்பட்ட சூழல் காரணிகளுக்குரிய மாறிகளை அதற்குரிய சூழல் காரணிகளின் கீழ் எழுதுவதில் மாணவர்களுக்கு வழிகாட்டவும்.
- பூரணப்படுத்தப்பட்ட வரைபடத்தினை வகுப்பில் முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்கவும்.
- பிழையாக வகைப்படுத்தப்பட்ட வகைகள் இருப்பின் அவற்றைத் திருத்துவதற்கு வழிகாட்டவும்.
- வரைபடத்தில் வழங்கப்பட்டுள்ள சூழல் காரணிகள், மாறிகள் சிலவற்றைத் தெரிவு செய்து அவை கணக்கீட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையினைத் தெளிவுபடுத்து வதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.

**பாடவிடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான வழிகாட்டல்கள்:**

- **கணக்கீட்டுச் சூழல்:**
  வணிகமொன்றின் கணக்கீட்டுச் செயன்முறையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சூழல் கணக்கீட்டுச் சூழலாகும்.
- வணிகமொன்றின் கணக்கீட்டுச் செயன்முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரதான சூழல் காரணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

| சூழல் காரணிகள் | விளக்கம் | மாறிகள் |
|---|---|---|
| 1. பொருளாதார, அரசியல் காரணிகள் | அரசொன்று தனது பொருளாதாரக் கொள்கையினைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும்பொழுது எடுக்கின்ற தீர்மானங்கள் **பொருளாதார அரசியல்** சூழல் காரணிகள் எனப்படும். | • வரிக் கொள்கை<br>• நாணயமாற்று விகிதம்<br>• விலைமட்டம்<br>• அரச கொள்கைகள் (வட்டி விகிதம், சம்பள தீர்மானம்)<br>• சந்தை நிலைமை (நிதி / மூலதனம்) |
| 2. நுட்பம் மற்றும் தொழில்சார் சூழல் | கணக்கீட்டுச் செயன்முறையொன்றின்போது வணிக வளங்களை அளவு ரீதியாகவும் நிதிசார் முறையிலும் அளவிடுவதற்கும் கணிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படும் பல்வேறு நுட்ப முறைகளை உள்ளடக்கிய சூழல் **நுட்பம் மற்றும் தொழில்சார் சூழலாகும்.** | • கணக்கீட்டு நியமங்கள்<br>• கணக்கீட்டு நுட்ப முறைகள்<br>• கணக்கீட்டின் தொழில்சார் நிறுவனங்கள் |
| 3. சட்டச் சூழல் | வணிகமொன்று கணக்கீட்டுச் செயன்முறையின்போது பின்பற்ற வேண்டிய சட்ட நிலைமைகளே **சட்டச் சூழல்** எனப்படும். | • 2007, 7ம் இலக்கக் கம்பனிச் சட்டம்<br>• 1890ம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டம்.<br>• உள்நாட்டு இறைவரிச் சட்டம்<br>• கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் சட்டம்<br>• கணக்கீட்டுடன் தொடர்புடைய வழக்கின் தீர்ப்புக்கள் |
| 4. சமூக கலாசாரச் சூழல் | சமூகத்தில் இருக்கும் தனிநபர்களின் எண்ணங்கள், நடைஉடை பாவனை, மனப்பாங்கு என்பவற்றுடனான சூழல் **சமூக கலாசாரச் சூழல்** எனப்படும். | • மனப்பாங்கு<br>• நடை, உடை, பாவனை<br>• பழக்கம்<br>• நம்பிக்கை<br>• குடித்தொகை<br>• குடிப்பரம்பல்<br>• தனிநபர் வாழ்க்கைப் போக்கு |
| 5. தொழினுட்பச் சூழல் | வணிககங்களின் கணக்கீட்டுக் கருமங்களை இலகுபடுத்துவதற்காக பல்வேறு தொழினுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தும் சூழல் **தொழினுட்பச் சூழல்** எனப்படும். | • கணினித் தொழினுட்பம்<br>• நவீன தொழினுட்பம்<br>• உபகரணங்களின் பயன்பாடு<br>• தொடர்பாடல் தொழினுட்பம் |

Draft

**கணக்கீட்டுச் சூழல் காரணிகளின் மாற்றம் கணக்கீட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறை:**

| சூழல் காரணிகள் | சூழல் காரணிகளின் மாறிகள் | கணக்கீட்டில் தாக்கம் செலுத்தும் முறை |
|---|---|---|
| 1. பொருளாதார, அரசியல் சூழல் காரணிகள் | • வட்டி வீதம் | • வட்டி வீதத்தைக் குறைப்பதன் காரணமாக வங்கிக் கடன்களை பெற்றுக் கொள்ள முனைவர்.<br>• மேலதிகக் கடன் பெற்றுக் கொள்ளல் அதிகரித்து வணிகம் விருத்தியடைந்து வருமானம் உயரும். |
| 2. நுட்ப மற்றும் தொழில் சார் சூழல் | • ஆதனம், பொறி மற்றும் உபகரண கணக்கீட்டு நியமங்களுக்கமைய தேய்விடுதல். | • பல்வேறு தேய்விடுதல் முறைகளில் அனேக வணிகங்கள் பல்வேறு முறைகளில் நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்துவதன் காரணமாக வணிகங்களின் கணக்கீட்டுத் தகவல்கள் ஒரே தன்மை பாதுகாக்கப்படுவதினூடாக ஒப்பிடுதல் தரப் பணப்பு உயர்வடையும். |
| 3. சட்டச் சூழல் | • 1890ம் ஆண்டுப் பங்குடைமைக் கட்டளைச் சட்டம்.<br>• 2007ம், 7ம் இலக்கக் கம்பனிச் சட்டம் | • எழுத்து மூல ஒப்பந்தமின்றி நடத்தப்படும் பங்குடைமை வணிகமொன்றின் இலாபம் சமமாகப் பகிரப்பட வேண்டும்.<br>• சகல வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளும் கம்பனிச் சட்டத்திற்கமைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். |
| 4. சமூக கலாசாரச் சூழல் | • தனிநபர் வாழ்க்கைப் போக்கு | • உள்நாட்டு உணவு வகைகளைப் பயன்படுத்தும் போக்கிற்கு மக்கள் கூடுதலான ஆர்வம் காட்டுவதன் காரணமாக உள்நாட்டு உணவு வகைகளை உற்பத்தி செய்யும் வணிகங்கள் கூடுதலாக ஆரம்பிக்கப்பட்டாலும் வணிகங்களின் விற்பனை அதிகரித்தலும் இலாபம் அதிகரித்தலும். |
| 5. தொழினுட்பச் சூழல் | • புதிய தொழினுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்படும். | • தங்க விற்பனையின்போது டென்சி மீட்டர் பயன்படுத்தப்படுவதால் வணிகங்களில் இடம்பெறக்கூடிய மோசடிகள் குறைவடைந்து இலாபம் அதிகரித்தல். |

Draft

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

- கணக்கீட்டுச் சூழல் காரணிகளைப் பெயரிடுவார்.
- சம்பள அதிகரிப்பினை மேற்கொள்வதற்கு அரசு எடுத்த தீர்மானம் காரணமாக வணிகங்களின் வருமானம் அதிகரித்துள்ளது. இது எவ்வகைச் சூழல் காரணிகளுக் குரியது என இனங்கண்டு கூறுவார்.
  1. அரசியல் பொருளாதாரச் சூழலுக்குரியது.
  2. சட்டச் சூழலுக்குரியது.
  3. தொழில் நுட்பச் சூழலுக்குரியது.
  4. சமூக கலாசாரச் சூழலுக்குரியது.
  5. நுட்ப மற்றும் தொழில்சார் சூழலுக்குரியது.
- சமூக கலாசார சூழல் காரணிகளுக்குரித்தான மாறிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அக்காரணிகளில் ஒன்று கணக்கீட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.
- "சட்டச் சூழலுக்குப் புறம்பாகக் கணக்கீட்டினை நடைமுறைப்படுத்த முடியும்". இக்கூற்று உண்மையானதா அல்லது பொய்யானதா என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.

| **பிரதான பதங்கள்** | මූලික පද | **Key terms** |
|---|---|---|
| • கணக்கீட்டுச் சூழல் | ගිණුම්කරණ පරිසරය | Accounting environment |
| • பொருளாதார மற்றும் அரசியல் சூழல் | ආර්ථික හා දේශපාලන පරිසරය | Economic and political environment |
| • நுட்ப மற்றும் தொழில்சார் நுட்பச் சூழல் | ශිල්පීය හා වෘත්තීය පරිසරය | Technical and professional environment |
| • சட்டச் சூழல் | නෛතික පරිසරය | Legal environment |
| • சமூக கலாசாரச் சூழல் | සමාජ හා සංස්කෘතික පරිසරය | Social and cultural environment |
| • தொழினுட்பச் சூழல் | තාක්ෂණික පරිසරය | Technological environment |

Draft

**இணைப்பு 1.2.1:**




Draft

**சூழற் காரணிகளுக்கான மாறிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | நாணயமாற்று விகிதம் | 7. | விலைமட்டம் |
| 2. | கணக்கீட்டு நியமங்கள் | 8. | தொடர்பாடல் தொழினுட்பம் |
| 3. | நவீன தொழினுட்பக் கருவிகள் | 9. | பங்குடைமைக் கட்டளைச் சட்டம் |
| 4. | வரிக் கொள்கைகள் | 10. | குடிப்பெயர்வு |
| 5. | கணினித் தொழினுட்பம் | 11. | கணக்கீட்டுத் தொழில்சார் நிறுவனங்கள் |
| 6. | கம்பனிச் சட்டம் | 12. | தனிநபர் வாழ்க்கைப் போக்கு |

**தேர்ச்சி 1.0:** கணக்கீட்டினையும் அதன் முக்கியத்துவத்தையும் பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.3:** கணக்கீட்டைச் செயன்முறையொன்றாகப் பகுப்பாய்வு செய்வார்.

**பாடவேளைகள்:** 01

**கற்றற் பேறுகள்:**

- கணக்கீட்டுச் செயன்முறைகளை விளக்குவார்.
- கணக்கீட்டுச் செயன்முறைகளின் படிமுறைகளைச் சுட்டிக் காட்டுவார்.

**பிரதான பதங்களும் எண்ணக்கருக்களும்:**

**எண்ணக்கருப்படம் (Concept Map)**




Draft

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**பிரவேசம்:**

- மாணவர்களோடு பின்வருவனவற்றைக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தி பாடவிடயங்களை வெளிப்படுத்திக் கொள்ளச் செய்யவும்.
    - நுகர்விற்காக வாங்கப்படும் பாண் உற்பத்திச் செயன்முறையொன்றினால் உருவாக்கப்பட்டது.

- பாண் உற்பத்திக்காகப் பயன்படுத்துபவைகள் உள்ளீடுகளாகும். இவற்றிற்காகப் பயன்படுத்துபவைகளைக் குறிப்பிட்டுக் காட்டவும்.
- பாண் உற்பத்தியில் செயன்முறையொன்று இடம்பெறுகின்றது. அச்செயன்முறையின் கூறுகள் எவை?
- இறுதியாக உற்பத்திப் பொருளொன்றாக ''பாண்'' கிடைக்கின்றது.




- கணக்கீடும் செயன்முறையொன்றாகும். மாணவர்களோடு இக்கருத்து தொடர்பாகக் கலந்துரையாடலில் ஈடுபடவும்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**




Draft

- கணக்கீட்டு வெளியீடான நிதிக்கூற்றுக்களை உருவாக்குவதற்கு ''அடிப்படைகளாகப்'' பயன்படுத்துபவைகள் கணக்கீட்டு உள்ளீடுகள் எனப்படும். அவைகள் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளுமாகும்.
    - கணக்கீட்டு உள்ளீடுகளுக்குரிய தகவல்களைப் பதிவு செய்யும் மூல ஆவணங் கள் தொடர்பாக முதலில் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

      **உதாரணம்:-** காசுப் பெறுவனவின்போது பற்றுச்சீட்டு
      காசுக் கொடுப்பனவின்போது கைச்சாத்து
    - இரு பிரிவினர்களுக்கிடையே பரிமாற்றம் இடம் பெறுபவைகளில் பணத்தினால் அளவிடக்கூடியவைகள் கொடுக்கல் வாங்கல்கள் எனப்படும்.

      **உதாரணம்:-**
        - விற்பனைக்காக ரூபா 30 000 பெறுமானம் கொண்ட பொருட் தொகுதி கொள்வனவு செய்தல்.
        - வங்கியிலிருந்து ரூபா 50 000 கடன் தொகை பெறல்.
        - ஊழியர் சம்பளமாக ரூபா 10 000 செலுத்துதல்.

    இக்கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக வணிகத்தின் சொத்துக்கள், பொறுப்புக் கள், உரிமை என்பவற்றில் நிதி சார்ந்த மாற்றங்கள் இடம்பெறும்.

    இரு பிரிவினர்களுக்கிடையே பரிமாற்றம் இடம்பெறாவிடினும் கூட வணிகத்தின் சொத்து, பொறுப்பு, உரிமை என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை பணத்தினால் அளவிடக்கூடியவைகள் ''நிகழ்வு'' களாகும்.

**உதாரணம்:-**
- இயந்திரம், தளபாடம் போன்ற சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக பெறுமானத்தேய்வடைதல் (பெறுமானம் குறைவடைதல்).
- இருப்புக்கள் சேதமுறுதல்.

- கணக்கீட்டுச் செயன்முறைகளின் படிமுறைகளைப் பின்வருமாறு காட்டலாம்.
  (1) வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளின் பெறுமானத்தை ''பணம்'' எனும் சாதனத்தினால் அளவிடல்.
  (2) மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மூல ஏடுகளில் பதிவு செய்தல்.
  (3) மூல ஏடுகளில் உள்ளடக்கப்பட்டவற்றை பேரேடுகளுக்கு மாற்றம் செய்தல்.
  (4) பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்தி பரீட்சை மீதியைத் தயாரித்தல்.



Draft

- பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியவாறு கணக்கீட்டுச் செயன்முறையில் உருவாக்கப்படும் நிதிக்கூற்றுக்களே **''கணக்கீட்டு வெளியீடு''** எனப் பொருள்படும். இதில் உட்படுபவைகளாக இருப்பது,
  - நிதியாண்டின் இலாப நட்டத்தைக் காட்டும் வருமானக்கூற்று / இலாப நட்டக்கூற்று
  - குறித்த தினத்தில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை என்பவற்றில் காணப்படும் நிலைமைகளைக் காட்டும் நிதிநிலைமைக்கூற்று.
  - உரிமையில் இடம்பெறும் மாற்றங்களைக் காட்டும் உரிமையாண்மை மாற்றல் கூற்று.
  - நிதியாண்டின் காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்களின் மாற்றங்களைக் காட்டும் காசுப்பாய்ச்சல் கூற்று.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

- பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ள மூல ஆவணங்கள் எவையெனக் குறிப்பிடுவார்.
  1. உடன் காசு விற்பனைகள் ரூபா 25 000 ஆகும்.
  2. காப்புறுதிக் கட்டணக் கொடுப்பனவு ரூபா 1 000 ஆகும்.
  3. விற்பனைக்காக ரூபா 45 000 பெறுமதியான இருப்பொன்று தாசனின் வணிகத்தி லிருந்து பெற்றுக் கொள்ளல்.
  4. தாசனின் வணிகத்திற்கு ரூபா 2 000 பெறுமதியான பொருட்தொகுதியொன்று கோரப்பட்ட வகையிலிருந்து வேறுபட்டிருந்தமையின் காரணமாகத் திருப்பி அனுப்புதல்.
- மேற்குறிப்பிடப்பட்ட (1) இல் காட்டப்படும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் பொழுது பயன்படுத்தப்படும் மூல ஏடுகள் எவையெனக் குறிப்பிடுவார்.
- கணக்கீட்டுச் செயன்முறைகளை முறையாகக் குறித்துக் காட்டுவார்.
- பின்வருவனவற்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் எவையென எடுத்துரைப்பார்.
  (அ) நிதியாண்டின் இலாபம்
  (ஆ) சொத்து, பொறுப்பு, உரிமை என்பவைகளின் நிலைமை
  (இ) நிதி நிலைமை மாற்றங்கள்

Draft

| **பிரதான பதங்கள்** | මූලික පද | **Key terms** |
|---|---|---|
| • வணிக அலகு எண்ணக்கரு | ව්‍යාපාර ඒකක සංකල්පය | Business entity concept |
| • பண அளவு எண்ணக்கரு | මූල්‍ය මිණුම් සංකල්පය | Money measurement concept |
| • சொத்துக்கள் | වත්කම් | Assets |
| • பொறுப்புக்கள் | වගකීම් | Liabilities |
| • உரிமையாண்மை | හිමිකම් | Equity |
| • கணக்கீட்டுச் சமன்பாடு | ගිණුම්කරණ සමීකරණය | Accounting equation |

**தேர்ச்சி 2.0:** **வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வு களையும் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1:** **வணிகமொன்றின் சொத்துக்கள் அதன் பொறுப்புக்கள், உரிமை என்பவற்றின் கூட்டுத்தொகைக்குச் சமப்படும் முறை யினைப் பகுப்பாய்வு செய்வார்.**

**பாடவேளைகள்:** 10

**கற்றற் பேறுகள்:**

- வணிக அலகு எண்ணக்கருவை விளக்குவார்.
- வணிக அலகொன்றின் கொடுக்கல் வாங்கல்களை விளக்குவார்.
- பண அளவீட்டு எண்ணக்கருவைத் தெளிவுபடுத்துவார்.
- கணக்கீட்டுச் சமன்பாட்டைக் கட்டியெழுப்புவார்.
- கொடுக்கல் வாங்கல்களானவை சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை என்பவற்றில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக முன்வைப்பார்.

Draft

**பிரதான பதங்களும் எண்ணக்கருக்களும்:**

**எண்ணக்கருப்படம் (Concept Map)**




**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**பிரவேசம்:**

- பிரதேசத்தில் காணப்படும் பிரசித்தி பெற்ற வணிகமொன்று தொடர்பாக மாணவர் களது கருத்துக்களைக் கேட்டறிந்து கலந்துரையாடலொன்றில் ஈடுபடுங்கள். பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதில் ஈடுபடுத்துங்கள்.
  - கணக்கு வைத்தலில் உரிமையாளரும் வணிகமும் வேறுபட்ட தனியான இரு அலகுகளாகக் கருதப்படும் என்பதை விளக்கவும்.

- வணிகங்களில் கொடுக்கல் வாங்கல்கள் எந்தளவில் இடம்பெற்றாலும் கூட பணத்தினால் அளவிடக்கூடிய வளங்களின் மாற்றங்கள் மாத்திரம் அறிக்கைப்படுத்தப் படும் என்பதனைத் தெளிவுபடுத்தவும்.
- வணிகத்தின் உரிமையாளரால் வணிகத்தில் ஈடுபடுத்தப்படும் வளங்கள் **'மூலதனம்'** எனக் கருதப்படுவதோடு இது வணிகத்தின் **'உரிமையாண்மை'** எனப்படும்.
- உரிமையாளரின் மூலதனம் போதியளவில் காணப்படாவிடின் வெளியகப் பிரிவினர்களிடமிருந்து கடனுக்குக் காசு அல்லது பொருட்கள், வேறு ஏதேனும் **சொத்துக்கள்** போன்றவற்றைப் பெற வேண்டி ஏற்படும். இதன் காரணமாக **பொறுப்புக்கள்** ஏற்படும் என்பதனைத் தெளிவுபடுத்தவும்.
- வணிகத்திற்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கும் பணத்தினால் அளவிடக் கூடிய வளங்கள் 'சொத்துக்கள்' எனக் கலந்துரையாடச் செய்யவும்.
- வணிகத்தின் உரிமையாளரினால் மட்டும் வளங்கள் ஈடுபடுத்தப்படுமாயின், சொத்துக்கள் = உரிமையாண்மை என உறுதிப்படுத்தச் செய்யவும்.
- உரிமையாளர்கள் மட்டுமன்றி வெளியகப் பிரிவினர்களும் வணிகத்திற்கு வளங்களை ஈடுபடுத்தியிருப்பின் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாடு, சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள் என உறுதிப்படுத்துங்கள்.
- பின்னர் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு மாணவர்களை வழிகாட்டவும்.

Draft

**செயற்பாடு - 01 - செயலடைவுப்படிவம்**

- ஒவ்வொரு குழுக்களுக்கும் பின்வரும் செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகளைப் பெற்றுக் கொடுக்கவும்.

| |
|---|
| சந்திரன் சில்லறை வணிகமொன்றை நடத்திச் செல்லும் வணிகரொரு வராவார். அவரது வணிக நடவடிக்கைகள் 2017 ஜனவரி 1 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக அவருக்கு அவரது தந்தையின் உரிமையின் மூலம் ரூபா 200 000 பெறுமதியான கட்டடமொன்றும், அவரிடம் சேமிப்பாகக் காணப்பட்ட ரூபா 100 000 மும் வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டது. அவரிடம் காணப்பட்ட ரூபா 500 000 சேமிப்பு வைப்பு வணிகத்தில் ஈடுபடுத்தப்படவில்லை.<br>வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் பொருட்டு ரூபா 4 000 000 வங்கிக் கடனொன்று பெறப்பட்டதுடன் முகாமையாளராகப் பட்டதாரியான பணியாளரொருவரையும் இணைத்துக் கொண்டார். |

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கிற்கான முன்மொழிவுகள்:**

- மாணவர்களை நான்கு குழுக்களாக வகைப்படுத்தவும்.
- அனைத்துக் குழுக்களுக்கும் செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகள் ஒவ்வொன்று வீதம் வழங்கவும்.
- கீழே காட்டப்பட்ட முறைக்கமைய செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும்.
  - ஒவ்வொரு குழுக்களுக்கும் எழுமாற்று முறையில் வினாக்களை வழங்கல்.
  - கலந்துரையாடி விடையெழுதுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கல்.
  - தேடியறிதல்களை ஒரு குழுவினால் முன்வைத்ததன் பின்னர் அதில் வெளிப்படும் பாடவிடயங்களை மாணவர்களக்குத் தெளிவுபடுத்தவும்.

- ஒவ்வொரு குழுக்களுக்குமுரிய வினாக்களைப் பின்வரும் முறையில் முன்வைக்கவும்.

| குழு இலக்கம் | முன்வைக்கப்படும் வினாக்கள் |
|---|---|
| 01 | • சந்திரன் தனது வணிகத்திற்காக **ஈடுபடுத்தக்கூடிய** வளங் களைப் பெறுமானங்களுடன் குறிப்பிடுக.<br>• அவ்வளங்களின் மூலம் தனது வணிக நடவடிக்கைகளுக்கு **ஈடுபடுத்தும்** வளங்களைப் பெறுமானங்களோடு குறிப்பிட் டுக் காட்டுங்கள். |
| 02 | • சந்திரன் தனது வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்வ தற்கு ஈடுபடுத்தும் வளங்களைப் பின்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுங்கள்.<br>1. பணத்தினால் அளவிடக்கூடிய வளங்கள்<br>2. பணத்தினால் அளவிடமுடியாத வளங்கள் |
| 03 | • சந்திரன் தனது வணிகத்தின் சார்பாக ஈடுபடுத்திய வளங் களைப் பெறுமானங்களோடு குறிப்பிட்டுக் காட்டுங்கள்.<br>• வணிகத்திற்காகப் வெளியகப் பிரிவினர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட வளங்களைப் பெறுமானங்களுடன் குறிப்பிட்டுக் காட்டுங்கள்.<br>• வணிகத்தில் ஈடுபடுத்திய வளங்களின் மொத்தப் பெறுமானத் தைக் குறிப்பிட்டுக் காட்டுங்கள். |
| 04 | • எவை?<br>• அவ்வளங்களின் மொத்த பெறுமானத்தைக் குறிப்பிட்டுக் காட்டுங்கள். |

Draft

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**

ஒவ்வொரு குழுக்களும் தத்தமது தேடியறிதல்களை முன்வைத்ததன் பின்னர் அக்குழுவின் வினாக்களுக்குரிய பாடவிடயங்களை பின்வரும் முறையில் குறிப்பிட்டுக் காட்ட முடியும்.

| குழு இலக்கம் | குறிப்பிட்ட பாடவிடயங்கள் |
|---|---|
| 01 | • வணிகத்திற்கு அதன் உரிமையாளர் மற்றும் ஏனைய பிரிவினர்களிலிருந்து வேறுபடுத்தப்பட்ட சுயாதீனமான தனிப்பட்ட தன்மை காணப்படும்.<br>• அது **வணிக அலகு சார் எண்ணக்கரு** என விளக்கவும்.<br>• உரிமையாளரின் கொடுக்கல் வாங்கல்கள் இன்றி வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மட்டும் அறிக்கைப்படுத்தப்படும் என. |
| 02 | • வணிகமொன்றின் பணத்தினால் அளவிடக்கூடிய வளங்கள் மட்டும் அறிக்கைப்படுத்தப்படும் என.<br>• அது பண அளவீட்டு எண்ணக்கருவாகும் என்பதை தெளிவுபடுத்தவும்.<br>• பணத்தினால் அளவிட முடியாத வளங்கள் ''தீர்மானமெடுத்தலுக்காக'' தேவைப்படுவதாக இருப்பினும் அவை அறிக்கைப்படுத்தப்படாதிருக்கும் என விளக்கவும். |
| 03 | • வணிகத்திற்கு உரிமையாளரினால் இடப்பட்டிருக்கும் வளங்கள் மூலதனம் எனவும், இது வணிகத்தினது உரிமையாண்மை எனவும்,<br>• வணிகம் உரிமையாளரன்றி வெளியகப் பிரிவினர்களுக்கு செலுத்த வேண்டிய கடப்பாடே 'பொறுப்பு' எனவும்,<br>• உரிமையாளர் மற்றும் வெளியகப் பிரிவினர்களிடமிருந்து வணிகத்திற்குக் கிடைத்திருக்கும் வளங்கள் 'மொத்த சொத்துக்கள்' என அழைக்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்தவும்.<br>• சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள் என அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டைக் கட்டியெழுப்பவும். |
| 04 | • உரிமையாளர் மட்டும் வணிகத்திற்கு வளங்கள் ஈடுபடுத்தி இருக்கும் பொழுது,<br>• சொத்துக்கள் = உரிமையாண்மை எனும் சமன்பாடு முதலாவதாகக் கட்டியெழுப்பப்படும் என விளக்கவும். |

Draft

**செயற்பாடு - 02**

- வகுப்பு மாணவர்களை நான்கு குழுக்களாக வகைப்படுத்தவும்.
- பின்வரும் விடய ஆய்வினை அக்குழுக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

**விடய ஆய்வு**

**சல்மான் சில்லறை விற்பனையகம்**

| | |
|---|---|
| 01/01 | சல்மான் 2017.01.01ம் திகதி தனக்குச் சொந்தமான காசு ரூபா 500 000 மும் ரூபா 700 000 பெறுமதியான மோட்டார் வாகனத்தையும் ஈடுபடுத்தி சில்லறை விற்பனையகமொன்று ஆரம்பிக்கப்பட்டது. |
| 01/02 | விற்பனைக்காக ரூபா 100 000 பெறுமதியான பொருள் உடன் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 01/03 | வணிகப் பயன்பாட்டிற்காக ரூபா 150 000 பெறுமதியான தளபாடங்களும் பொருத்துதல்களும் சியானா தளபாடக் கம்பனியிடமிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 01/04 | மாதாந்தம் ரூபா 10 000 சம்பளக் கொடுப்பனவு ஒப்பந்த அடிப்படையில் ஊழியரொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டார். |
| 01/05 | வணிகத்தின் மோட்டார் வாகனத்திற்கான எரிபொருள் செலவாக ரூபா 10 000 செலுத்தப்பட்டது. |
| 01/06 | சியானா கம்பனிக்கு ரூபா 25 000 காசு செலுத்தப்பட்டது. |
| 01/07 | சல்மானின் வீட்டை திருடர்கள் உடைத்ததன் விளைவாக ரூபா 150 000 பெறுமதியான சேதம் ஏற்பட்டது. |

Draft

- மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களை உரிமையாண்மை + பொறுப்பு = சொத்துக்கள் எனும் அடிப்படைச் சமன்பாட்டிற்குப் பிரதியீடு செய்து காட்டவும்.
- மேற்குறிப்பிடப்பட்ட விடய ஆய்வில் உள்ளடக்கப்பட்ட அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பிரதியீடு செய்ய முடியுமா? என்பதனைக் கேட்டறியவும்.
- குழுத் தேடியறிதல்களை ஆக்கபூர்வமானதாக குழு ஒருமைப்பாடுடன் முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்தப்படுத்தவும்.

**உதாரணம்:**

| உரிமையாண்மை | + பொறுப்பு | = | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|
| + 1200 000 | | | வங்கி | + 500 000 |
| | | | மோட்டார் | + 700 000 |
| + 1200 000 | | | | + 1200 000 |

**பாடவிடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான வழிகாட்டல்கள்:**

- அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கும் கூறுகளை (மாறிகளை) மீண்டும் நினைவில் கொண்டு வரவும்.
- வணிகமொன்றில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளில் பணத்தினால் அளவிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள் மட்டும் அறிக்கைப்படுத்தப்படும் என,

- **கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறாகத் தோற்றம் பெற்றிருப்பதும், எதிர்காலப் பொருளாதார நலனொன்று உட்பாய்ச்சப்படுவதும், வணிகத்தினால் கட்டுப்படுத்தக் கூடியதுமான வளங்கள் சொத்தொன்றாகும்.**
- **கடந்தகால கொடுக்கல் வாங்கல்களின் விளைவாகத் தோற்றம் பெற்றிருக்கு மொன்றைத் தீர்ப்பனவு செய்யும்பொழுது வளங்கள் வெளிச் செல்லக்கூடிய நிகழ்காலக் கடப்பாடுகள் பொறுப்பொன்றாகும்.**
- வணிகக் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் என்பன சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை என்பவற்றில் ஏற்படுத்தும் இரட்டை விளைவைப் பின்வரும் முறையில் பொழிப்பாக்கிக் காட்ட முடியும் என.

| **கொடுக்கல் வாங்கல் இலக்கம்** | **உரிமையாண்மை** | **+ பொறுப்பு** | **=** | **சொத்துக்கள்** | **இரட்டை விளைவு** |
|---|---|---|---|---|---|
| 01 | | | = | ± | சொத்தொன்று குறைவடைந்து மற்றோர் சொத்து அதிகரிக்கும். |
| 02 | | + | = | + | சொத்து அதிகரித்து பொறுப்பும் அதிகரிக்கும். |
| 03 | | - | = | - | சொத்துக் குறைவடைந்து பொறுப்பும் குறைவடையும். |
| 04 | + | | = | + | சொத்து அதிகரித்து உரிமையும் அதிகரிக்கும். |
| 05 | - | | = | - | சொத்துக் குறைவடைந்து உரிமையும் குறைவடையும். |
| 06 | + | - | = | | பொறுப்புக் குறைவடைந்து உரிமை அதிகரிக்கும். |
| 07 | - | + | = | | பொறுப்பு அதிகரித்து உரிமை குறைவடையும் |

Draft

- மேற்குறிப்பிடப்பட்ட பெறுபேறுகளுக்கு அமைய கொடுக்கல் வாங்கல்களை உதார ணங்கள் மூலம் மாணவர்களோடு கலந்துரையாடவும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

(1) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினூடாக வணிகத்தின் உரிமையில் தாக்கத்தை ஏற்படுத்தும் **கொடுக்கல் வாங்கல்களை** மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்யவும்.

(i) அருண் காசாக ரூபா 500 000 இட்டு வணிகமொன்றை ஆரம்பித்தல்.

(ii) அருணுக்குத் தனது தந்தையின் உரிமையிலிருந்து பெற்ற ரூபா 100 000 பெறுமதியான கட்டடமொன்று வணிகத்தின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தல்.

(iii) வணிக நடவடிக்கைகளுக்காக ரூபா 800 000 பெறுமதியான மோட்டார் வண்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

(iv) வணிகத்தின் பயன்பாடு கருதி ரூபா 100 000 பெறுமதியான உபகரணங்கள் கமலிடமிருந்து கடனுக்குப் பெறல்.

(v) மீள்விற்பனை கருதி ரூபா 40 000 பெறுமதியான பொருள்கள் உடன் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

(2) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் உரிமையாண்மையிலும் சொத்துக்களிலும் குறைவை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களைத் தெரிவு செய்யவும்.

(i) வங்கியிலிருந்து கடனாக ரூபா 200 000 பெறல்.

(ii) சரக்கு ரூபா 50 000த்திற்கு உடன் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

(iii) உரிமையாளர் பொருள் பற்று ரூபா 10 000

(iv) வங்கியிலிருந்து பெற்ற கடனுக்கு ரூபா 30 000 மீளச் செலுத்துதல்.

(v) கடன் கொள்வனவு ரூபா 40 000

(3) பின்வரும் கூற்றுக்களில் ஒன்று தவிர்ந்த ஏனையவைகள் சரியானவைகளாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்யவும்.

(i) வெளியகப் பிரிவினர்கள் வணிக வளங்களுக்காக பங்களிப்புச் செய்யாதுள்ள போது கணக்கீட்டுச் சமன்பாடானது சொத்துக்கள் = உரிமையாகும்.

(ii) வணிகத்திற்கு அதன் உரிமையாளர்களினாலும் அவருக்குரித்தான ஏனைய வணிகங்களிலிருந்தும் வேறுபட்ட தன்னிச்சையான வாழ்தன்மையொன்று உண்டு.

(iii) பணத்தினால் அளவிடக்கூடிய நடவடிக்கைகளே கணக்குகளில் அறிக்கைப் படுத்தப்படுகின்றன.

(iv) வணிகமொன்றின் சொத்துக்களில் மாற்றங்கள் ஏற்படும் அனைத்து வேளை களிலும் கட்டாயமாக உரிமையில் குறைவொன்றையோ அல்லது அதிகரிப் பொன்றையோ ஏற்படுத்தலாம்.

(v) வணிகத்தின் பொறுப்புக்களின் மாற்றமானது சொத்துக்களில் மட்டுமன்றி உரிமையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

(4) பின்வரும் கூற்றுக்கள் உண்மையாயின் (√) அடையாளத்தையும் பொய்யாயின் (×) அடையாளத்தையும் இடவும்.

(i) கணக்கு வைக்கும் பொழுது அலகுசார் எண்ணக்கருவைப் பயன்படுத்துதல் வேண்டும். (......)

(ii) வணிகத்தின் மூலம் உரிமையாளரின் தனிப்பட்ட செலவுகள் கொடுக்கப்படல் வேண்டும். (......)

(iii) சொத்துக்கள் மாற்றமடைவது உரிமையில் அல்லது பொறுப்புக்களின் தாக்க மொன்றினாலாகும். (......)

(iv) உரிமையாளருக்கு தொடக்கத்தில் இடப்படும் மூலதனத்திற்கு மேலதிகமாக மூலதனத்தை இடமுடியாது. (......)

(v) உரிமையாரொருவருக்கு பல வணிகங்கள் உள்ளபோது அவ்வனைத்தும் ஒரே வணிகமொன்றாகக் கருதி கணக்கு வைத்தல் பொருத்தமானது. (......)

**விடை:**

(1) (i), (ii) (2) (iii) (3) (iv)

(4) (i) உண்மை (ii) பொய் (iii) பொய் (iv) பொய் (v) பொய்

Draft

(2) ஜானகி 2017 ஜனவரி 01 ஆம் திகதி வணிகத்தை ஆரம்பிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்ட சொத்துக்களையும் முதலாம் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவினையும் சமன்பாட்டுத் தன்மைக்கமைய பின்வருமாறு காட்டப்படும்.

**(ரூபா 000)**

| | **கொடுக்கல் வாங்கல்கள்** | **சொத்துக்கள்** | **= உரிமையாண்மை** | **+ பொறுப்பு** |
|---|---|---|---|---|
| (i) | காணி கட்டடம் | + 5 000 | | |
| | மோட்டார் | + 2 000 | | |
| | காசு | + 1 000 | = 8 000 | + |
| (ii) | காசு | - 500 | | |
| | சரக்கிருப்பு | + 500 | = | + |
| (iii) | அலுவலக உபகரணம் | + 300 | | |
| | காசு | - 300 | = | + |
| (iv) | காசு | + 800 | = | + + 800 (வங்கிக்கடன்) |
| (v) | காசு | - 200 | = - 200 (உரிமை) | + |

Draft

**வேண்டப்படுவது:**

(1) மேற்காட்டப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் பெறுமானங்களோடு விபரிக்கவும்.

(2) முதலாம் வார இறுதியில் மொத்த சொத்துக்கள், மொத்த பொறுப்புக்கள், மொத்த உரிமையாண்மை என்பவற்றைக் காட்டவும்.

(3) செல்வா வணிகத்தின் 2017 ஜனவரி 01ம் திகதியில் கணக்கு மீதிகள் பின்வருமாறு இருந்தது. **(ரூபா 000)**

| | |
|---|---|
| காணி கட்டடம் | 4 000 |
| பேருந்து வண்டி | 2 000 |
| காசு | 500 |
| வங்கிக்கடன் | 1 500 |

ஜனவரி மாத முதல் வார நடவடிக்கைகள் பின்வருமாறு (000களில்):

(1) ரூபா 50 இற்குப் பண்டங்கள் வாங்கப்பட்டன.

(2) வங்கிக் கடன்களின் பகுதிக் கொடுப்பனவாக ரூபா 500 செலுத்தப்பட்டது.

(3) ரூபா 250 பண்டங்கள் சந்திரனிடம் கடனுக்கு வாங்கப்பட்டன.

(4) ரூபா 25 பெறுமதியான பண்டங்கள் அதன் வகை வேறுபாடு காரணமாகத் திருப்பியனுப்பப்பட்டன.

(5) செல்வா தனது சொந்தத் தேவைகளுக்கென ரூபா 50 எடுத்திருந்தார்.

**வேண்டுவது:**

(1) சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள் எனும் சமன்பாட்டில் பெறுமானங்களுடன் மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்களைக் குறிப்பிடுக.

(2) மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் மொத்த உரிமையாண்மை, மொத்தச் சொத்துக்கள், மொத்தப் பொறுப்புக்களின் பெறுமானங்களைக் குறிப்பிடுக.

**தேர்ச்சி 2.0:** **வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வு களையும் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2:** **வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் மூலம் உரிமையில் மாற்றமேற்படும் முறையினை அறிந்து கொள்வார்.**

**பாடவேளைகள்:** 03

**கற்றற் பேறுகள்:**

- உரிமை மாற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளைப் பெயரிட்டு விபரிப்பார்.
- உரிமையாண்மை / தேறிய சொத்துக்களைக் கணிப்பிடுவார்.
- தேறிய சொத்துக்களினூடாக இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடுவார்.

**பிரதான பதங்களும் எண்ணக்கருக்களும்:**

**எண்ணக்கருப்படம் (Concept Map)**




Draft

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**பிரவேசம்:**

- பின்வரும் கூற்றினை வகுப்பிலுள்ள மாணவர் இருவரை அழைத்து முழு வகுப்பிற்கும் நடிப்பினூடாக முன்வைக்கச் செய்யவும்.
- அம்மாணவர்கள் நடித்துக் காட்டியவற்றில் உள்ளடங்கியுள்ள **கொடுக்கல் வாங்கல் களை** இன்னொரு மாணவரைக் கொண்டு கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதச் செய்யவும்.
- உரிமையாண்மைக்கும் மூலதனத்திற்குமிடையிலான வேறுபாடுகளைக் காட்டவும்.
- வணிகத்தின் நிதிப் பெறுபேறு உரிமையாண்மையில் ஏற்படுத்தும் தாக்கத்தை விபரிக்கவும்.

**ரதி:** ஆ...... ராஜ் உமது வணிகக் கருமங்கள் அனைத்தும் எவ்வாறுள்ளன?

**ராஜ்:** நான் அண்மையில் 20 இலட்சம் ரூபாவை ஈடுபடுத்தி வாகன விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்துள்ளேன். அப்பணத்தின் மூலம் இரு வாகனங்களை கொள்வனவு செய்ததுடன் பின்னர் அதனை 30 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்தேன்.

**ரதி:** ஷா...... உமது வியாபாரம் நல்ல முன்னேற்றமாகத்தான் உள்ளது.

**ராஜ்:** ஆமாம். எனினும் இதற்காக நான் கொஞ்சம் செலவழித்தேன். வாகன விற்பனை நிலையக் கட்டடத்திற்கு மாதாந்தம் ரூபா 50 000 செலுத்துகின்றேன். அதற்கு மேலதிகமாக மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணமாக ரூபா 10 000 வைச் செலுத்தியுள்ளேன்.

**ரதி:** அண்மையில் வாகனங்கள் எதனையும் கொள்வனவு செய்யவில்லையா?

**ராஜ்:** இரு வாகனங்களைக் கொள்வனவு செய்தேன். அவற்றிற்கு 25 இலட்சம் ரூபாவை செலவழித்தேன். பின்னர் பணம் போதாமையினால் எனது காணியொன் றினை விற்பனை செய்து 50 இலட்சம் ரூபாவை வணிகத்தில் இட்டேன். எனினும் எனது மனைவி சுகவீனமுற்றமையால் வணிகப் பணத்திலிருந்து அதற்காக 150 000 செலவழித்தேன். மகனின் பாடநெறிக் கட்டணமாக ரூபா 100 000வை வணிகப் பணத்திலிருந்து செலுத்தினேன். செலவுகளைக் கொஞ்ச மேனும் கட்டுப்படுத்த முயற்சிக்கிறேன்.

**ரதி:** எனக்கும் வாகன வியாபாரம் செய்ய ஆசையாகவுள்ளது.

**ராஜ்:** நல்ல எண்ணம்தான். பணம் இருந்தால் வணிகத்தை தொடங்குங்கள். கடந்த வாரம் நான் வணிகத்திற்கு மக்கள் வங்கியிலிருந்தும் 800 000 ரூபாவைக் கடனாக எடுத்தேன்.

Draft

- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்திக் கலந்துரையாடலொன்றை நடத்தவும்.
  - மேலதிக மூலதனமிடல் உரிமை அதிகரிப்பில் தாக்கத்தையேற்படுத்தும் என.
  - உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக வணிகத்திலிருந்து எடுக்கும் வளங் களின் நிதிசார் பெறுமதி ''பற்று'' எனும் பெயரில் அழைக்கப்படுவதுடன், பற்று காரணமாக உரிமை குறைவடையும் என.
  - வணிகத்தை நடத்திச் செல்லும்போது பல்வேறு செயற்பாட்டுச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் எனவும், செயற்பாட்டுச் செலவுகள் காரணமாக உரிமை குறைவடையும் எனவும், செயற்பாட்டுச் செலவுகளுக்கு உதாரணமாக மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், கட்டட வாடகை போன்றவற்றைக் குறிப்பிட முடியும் என.
  - வணிகத்தின் நாளாந்த செயற்பாட்டுக் கருமங்களினூடாக வருமானம் உழைக்கப் படுகின்றதெனவும், வருமானங்களுக்கு உதாரணமாக மோட்டார் வாகன விற்பனை வருமானம், வங்கி வைப்பு வட்டி வருமானம் போன்றவற்றைக் காட்டமுடியும் என.
  - வருமானம் காரணமாக இலாபம் அதிகரிக்கும். அதன் காரணமாக உரிமையாண்மை அதிகரிக்கும் என.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**

**நிகழ்வு / செயற்பாடு**

பின்வரும் நிகழ்வுகளை உள்ளடக்கிய செயற்பாட்டுப் பத்திரங்களின் நிழற்பிரதிகளை வகுப்பிலுள்ள நான்கு மாணவர் குழுக்களுக்குப் பகிர்ந்தளிக்கவும்.

| | |
|---|---|
| **2017 சனவரி** | 01ல் ரூபிகா அழகுக்கலை நிலையமொன்றை ஆரம்பித்ததுடன், அவரின் வணிகத்தில் முதல் வாரத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றுள்ளன. |
| **2017.01.01** | அவரிடமிருந்த ரூபா 8 இலட்சம் பெறுமதியான கட்டடத்தில் ரூபா 5 இலட்சம் பணமாக முதலீடு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. |
| **2017.01.02** | அழகுக்கலை கருமங்களுக்குத் தேவையான ரூபா 225 000 பெறுமதி யான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது. |
| **2017.01.03** | அழகுக்கலை சேவை வழங்கல் மூலம் ரூபா 150 000 பெறப்பட்டதுடன் அதற்காக பயன்படுத்திய பொருட்களுக்கான கிரயம் ரூபா 100 000 ஆகும். |
| **2017.01.04** | வணிகக் கருமங்களை விரிவுபடுத்துவதற்கு மக்கள் வங்கியிலிருந்து ரூபா 2 இலட்சம் கடன் பெறப்பட்டது. |
| **2017.01.05** | வணிகத்தின் தொலைபேசிக் கட்டணமாக ரூபா 3 000, மின்சாரக் கட்டணமாக ரூபா 2 000 என்பன காசாகச் செலுத்தப்பட்டன. |
| **2017.01.06** | உதவியாளரின் சம்பளமாக ரூபா 10 000 செலுத்தப்பட்டது. |
| **2017.01.07** | ரூபிகாவின் தனிப்பட்ட தேவைக்காக வணிகத்திலிருந்து எடுத்த பணம் ரூபா 4 000 ஆகும். |
| **2017.01.07** | கடனுக்கு வழங்கிய சேவைகள் ரூபா 50 000 ஆகும் பயன்படுத்திய பொருட்களின் பெறுமதி ரூபா 40 000 ஆகும். |

- குழுவிற்கு கிடைத்த செயற்பாட்டுப் பத்திரத்தினை நன்றாக வாசிப்பதற்கு இடமளிக்கவும்.
- அந்நிகழ்வில் உள்ளடங்கியுள்ள கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு கீழே காட்டப்பட்ட முறையிலமைந்த கணக்கீட்டுச் சமன்பாடொன்றில் கொடுக்கல் வாங்கல் களின் தாக்கங்களைக் காட்டுவதற்கு வழிகாட்டவும்.

| **கொடுக்கல் வாங்கல்கள்** | **மூலதனம்** | **வருமானம்** | **செலவு** | **பொறுப்பு** | **சொத்து** |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |

- வணிகத்தின் மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவுகளைக் கணிப்பதற்கு வழிகாட்டவும்.
- வணிகத்தின் செயற்பாட்டுப் பெறுபேறு உரிமையாண்மையில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பது தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வழிகாட்டவும்.
- குழுத் தேடியறிதல்களை ஆக்கபூர்வமாகவும் குழு ஒருமைப்பாட்டுடனும் முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு தயார்ப்படுத்தவும்.

**பாடவிடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான வழிகாட்டல்கள்:**

- வணிகமொன்று தனது செயற்பாட்டுக் கருமங்களினூடாக வருமானத்தை உழைக் கின்றது.
- குறித்த நிதியாண்டில் வணிகத்தில் காசு உட்பாய்தல் அல்லது சொத்துக்களின் பெறுமதியை அதிகரிக்கக்கூடிய அல்லது பொறுப்புக்களைக் குறைக்கக்கூடிய தன்மையைக் கொண்ட, உரிமையாளரின் பங்களிப்பின்றி உரிமை அதிகரிப்புக்குக் காரணமாக அமையும் பொருளாதார நன்மைகள் **‘‘வருமானங்கள்’’** எனப்படும்.
- வணிகமொன்று செயற்பாட்டுக் கருமங்களை நடத்திச் செல்லும்போது பல்வேறு வகையான செலவுகளை ஏற்க வேண்டியுள்ளன. அவ்வகையில், நிதியாண்டில் வணிகத்திலிருந்து காசு வெளிப்பாய்தல் அல்லது சொத்துக்களின் பெறுமதி குறைவடைதல் அல்லது பொறுப்பினை அதிகரிக்கக்கூடிய தன்மையுடைய, உரிமை யாளருக்கு மேற்கொள்ளப்படுகின்ற வழங்கல்கள் தவிர்ந்த உரிமை குறைவடைவதற்கு காரணமான பொருளாதார நன்மைகள் குறைவடைதல் **‘‘செலவினம்’’** எனப்படும்.
- செலவுகளை மிஞ்சியதாகக் காணப்படுகின்ற வருமானம் **‘‘இலாபம்’’** எனப்படுவதுடன், வருமானத்தை மிஞ்சிய செலவினம் **‘‘நட்டம்**’’ எனப்படும்.
- நிதியாண்டுக்குரிய வருமானங்களிற்கும் செலவினங்களிற்குமிடையிலான வேறுபாடு நிதிப் பெறுபேறு ஆகும்.
- வணிகத்தின் உரிமையாளர் தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வணிகத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் பொருட்கள், காசு அல்லது சொத்துக்களைப் பயன்படுத்தல் ‘‘பற்று’’ எனப்படுவதுடன், பற்று காரணமாக உரிமையாண்மை குறைவடையும்.
- வணிகத்தின் இறுதி உரிமையாண்மை, ஆரம்ப உரிமையாண்மை என்பவற்றுக் கிடையிலான வேறுபாட்டுடன் பற்றைக் கூட்டி, மேலதிகமாக இட்ட மூலதனத்தைக் கழிப்பதன் மூலம் இலாபம் அல்லது நட்டத்தைக் கணிக்க முடியும்.

| | |
|---|---|
| இறுதி உரிமையாண்மை / இறுதி தேறிய சொத்து (CNA) | XX |
| **கழி:** ஆரம்ப உரிமையாண்மை / ஆரம்ப தேறிய சொத்து (ONA) | (XX) |
| | XX |
| **கூட்டு:** பற்று (D) | XX |
| | XX |
| **கழி:** மேலதிக மூலதனம் (AC) | (XX) |
| இலாபம் / நட்டம் (P/L) | XX |

P/L = CNA - ONA + D - AC

Draft

## ரூபிகா வணிகம்

**(ரூபா 000 களில்)**

| கொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற திகதி | மூலதனம் | வருமானம் | செலவு | பொறுப்பு | சொத்து |
|---|---|---|---|---|---|
| 01/01 | + 1 300 | | | | காசு + 500<br>கட்டடம் + 800 |
| 01/02 | | | | | பொருள் இருப்பு + 225<br>காசு - 225 |
| 01/03 | | + 150<br>விற்பனை | + 100<br>விற்பனைக் கிரயம் | | பொருள் இருப்பு - 100<br>காசு + 150 |
| 01/04 | | | | + 200<br>வங்கிக்கடன் | காசு + 200 |
| 01/05 | | | + 3<br>(தொலைபேசி)<br>+ 2<br>(மின்சாரம்) | | காசு - 5 |
| 01/06 | | | + 10<br>சம்பளம் | | காசு - 10 |
| 01/07 | - 4<br>பற்று | | | | காசு - 4 |
| 01/07 | | + 50<br>விற்பனை | + 40<br>விற்பனைக் கிரயம் | | சரக்கிருப்பு - 40<br>கடன்பட்டோர் + 50 |
| | 1 296 | 200 | 155 | 200 | 1 541 |

Draft

- ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் மூலமும் மூலதனத்திற்கு, வருமானத்திற்கு, செலவிற்கு, சொத்துக்கு, பொறுப்பிற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் + மற்றும் - அடையாளம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

- இலாபம் பின்வருமாறு கணிப்பிடப்படும் முறை பின்வருமாறு:

இலாபம் = வருமானம் - செலவினம்

= 200 - 155

= ரூபா 45

- ரூபிகா வணிகத்தின் இலாபமானது தேறிய சொத்துக்களைப் பயன்படுத்திக் கணிப்பிடும் முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | ரூபா |
|---|---|---|
| | இறுதி தேறிய சொத்து (1 300 + 200 - 55) | 1 341 |
| **கழி:** | ஆரம்ப தேறிய சொத்து | (1 300) |
| | | 41 |
| **கூட்டு:** | பற்றுக்கள் | 04 |
| | இலாபம் | 45 |

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

(1) வணிகமொன்றின் உரிமையில் தாக்கத்தையேற்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கலை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவு செய்க.

A. உரிமையாளரிடம் காணப்பட்ட ரூபா 400 000 பெறுமதியான காணி கட்டடம் வணிகச் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படல்.

B. உரிமையாளரின் வீட்டு தொலைபேசிக் கட்டணம் ரூபா 50 000 வணிகத்தினது பணத்திலிருந்து செலுத்தப்படல்.

C. வணிகத்தின் மின்சாரக் கட்டணம் ரூபா 150 000 செலுத்தப்படல்.

D. வணிகத்தின் பயன்பாட்டிற்காக ரூபா 100 000 செலுத்தி கணினியொன்று கொள்வனவு செய்யப்படல்.

E. வணிகத்தின் நிலையான வைப்பிற்கு வட்டியாக ரூபா 20 000 கிடைத்தல்.

(i) A, B, D, E (ii) A, B, C, D (iii) A, B, C, E

(iv) B, C, D, E (v) A, B, C மட்டும்

(2) பின்வரும் கூற்றுக்களுள் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை வழங்கப் பட்டுள்ள உள்ளீடுகளிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

**உள்ளீடு:** (பற்று, செலவு, வருமானம், உரிமை, மேலதிக மூலதனம்)

(i) செயற்பட்டு வரும் வணிகமொன்றிற்கு மேலதிகமாக உரிமையாளரால் ஈடுபடுத்தப்படுகின்ற வளங்கள் ............................. எனப்படும். இது உரிமை யினை அதிகரிக்கும்.

(ii) வணிகக் கருமங்களை மேற்கொள்ளும்போது பல்வேறுபட்ட .............களை ஏற்கவேண்டியிருக்கும். இதன் மூலம் உரிமை குறைவடையும்.

(iii) வணிகத்தின் உரிமையாளர் வணிகத்திலிருந்து அகற்றும் வளங்களின் நிதி சார் பெறுமதி ................................. எனப்படும், இவ்வகையான கொடுக்கல் வாங்கல் காரணமாக உரிமை குறைவடையும்.

(iv) வணிகத்தின் பல்வேறு செயற்பாட்டுக் கருமங்கள் / செயற்பாடுகள் காரணமாக பல்வேறு பெறுவனவுகள் கிடைக்கப் பெறும். இவை ............................... எனப்படும். இவ்வாறான கொடுக்கல் வாங்கல் காரணமாக உரிமை அதிகரிக்கும்.

(v) வணிகத்தின் உரிமையாளர்களுக்கு வணிகம் தொடர்பில் காணப்படுகின்ற உரித்து .................................... எனப்படும்.

Draft

(3) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) என்ற குறியீட்டினையும், பிழையாயின் (×) என்ற குறியீட்டினையும் இடவும்.

(i) வருமானம் காரணமாக வணிகத்தின் உரிமை அதிகரிக்கும். (..........)

(ii) மேலதிக மூலதனமிடப்படுவதால் உரிமை மாற்றமடையாது. (..........)

(iii) வருமானம் உழைக்கும்போது பல்வேறு செலவுகளை ஏற்க வேண்டியிருக்கும். (..........)

(iv) வங்கிக்கடன் எடுக்கும்போது உரிமை மாத்திரம் அதிகரிக்கும். (..........)

(v) பற்று காரணமாக வணிகத்தின் செலவு அதிகரிக்கும். (..........)

(4) ஜெயராமன் வணிகத்தில் 2017/01/01 இல் காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக் கள் கீழே தரப்பட்டுள்ளன. (தொகைகள் 000 களில்)

| | | | |
|---|---|---|---|
| காணிகட்டடம் | ரூபா 5 000 | மோட்டார் வாகனம் | ரூபா 3 000 |
| நிலையான வைப்பு | ரூபா 2 000 | சரக்கிருப்பு | ரூபா 1 000 |
| காசுமீதி | ரூபா 1 500 | வங்கிக்கடன் | ரூபா 2 000 |

2017 ஜனவரி மாதத்தினுள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது. (ரூபா 000)

(1) ரூபா 400 கிரயம் கொண்ட சரக்குகள் ரூபா 600 விற்கு காசுக்கு விற்கப் பட்டது.

(2) ஊழியர் சம்பளம் செலுத்தியது ரூபா 100.

(3) ரசீகாவிடம் கடனுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் ரூபா 500.

(4) ரூபா 200 பெறுமதியான சரக்குகள் ரிமாஸிற்கு ரூபா 300 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

(5) ஜெயராமனது வீட்டில் நடத்தப்பட்ட மதச் சடங்குச் செயற்பாடுகளுக்காக ரூபா 50 பெறுமதியான சரக்குகள் வணிகத்திலிருந்து எடுத்துச் செல்லப் பட்டது.

(6) ஜனவரி மாதத்திற்கு கிடைக்கப் பெற்ற மின்சாரப் பட்டியலின் பெறுமதி ரூபா 20.

(7) வங்கிக்கடனுக்குச் செலுத்திய வட்டி ரூபா 20 ஆகும்.

**வேண்டப்படுவது:**

(1) சொத்து = உரிமையாண்மை + பொறுப்பு எனும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்படுகின்ற தாக்கத்தை +/- என (பெறுமதிகளுடன்) எழுதிக் காட்டுக.

(2) சொத்து = மூலதனம் + (வருமானம் - செலவு) + பொறுப்பு என்ற சமன் பாட்டிற்கு மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்படுகின்ற தாக்கத்தை +/- என்றவாறு பெறுமதிகளுடன் எழுதிக் காட்டுக.

(3) மேற்குறிப்பிட்ட வருமானம் மற்றும் செலவுகளின் உதவியுடன் 2017 ஜனவரி மாதத்திற்கான இலாபம் / நட்டத்தைக் கணிக்க.

(4) தேறிய சொத்துக்களின் உதவியுடன் 2017 ஜனவரி மாத இலாபம் / நட்டத் தைக் கணிக்க.

Draft

(5) வணிகமொன்று இலாபம் உழைப்பதற்கு காரணமாக அமைகின்ற பின்வரும் மூன்று துறைகளுக்கும் தலா ஒவ்வொரு உதாரணங்களை வெவ்வேறாகத் தருக.

(1) **வணிகமொன்று வருமானம் உழைப்பதற்கு உதவுகின்ற பொருளாதார அனுகூலங்களின் தன்மைகள்**

- (1) வணிகத்தினுள் காசு உட்பாய்தல் ..............................
- (2) வணிகத்தின் சொத்துக்கள் அதிகரித்தல் ....................................
- (3) பொறுப்புக் குறைவடைதல் .........................

(2) **வணிகமொன்றின் செலவினத்திற்குரிய பொருளாதார அனுகூலங்களின் தன்மைகள்**

- (1) வணிகத்திலிருந்து காசு வெளிப்பாய்தல் ...............................
- (2) வணிகத்திலுள்ள சொத்துக்களின் பெறுமதி குறைதல் ..........................................................
- (3) பொறுப்பு அதிகரித்தல் .....................

Draft

| **பிரதான பதங்கள்** | මූලික පද | **Key terms** |
|---|---|---|
| அக்கறையுள்ள தரப்பினர் | ඇල්මැති පාර්ශ්වයන් | Stake holders |
| தேறிய சொத்துக்கள் | ශුද්ධ වත්කම් | Net assets |
| பற்றுக்கள் | ගැනිලි | Drawings |
| மேலதிக மூலதனம் | අමතර ප්‍රාග්ධනය | Additional capital |
| வருமானம் | ආදායම | Income |
| செலவினம் | වියදම | Expense |
| தேறிய இலாபம் | ශුද්ධ ලාභය | Net profit |
| தேறிய நட்டம் | ශුද්ධ අලාභය | Net loss |

**தேர்ச்சி 2.0:** **வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வு களையும் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3:** **கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக வருமானக்கூற்றினையும், நிதி நிலைமைக்கூற்றினையும் தயாரிப்பார்.**

**பாடவேளைகள்:** 02

**கற்றற் பேறுகள்:**

- இணைதல் எண்ணக்கருவினை விளக்குவார்.
- வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று என்பவற்றை விளக்குவார்.
- கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக வருமானக்கூற்றைத் தயாரிப்பார்.
- கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக நிதிநிலைமைக்கூற்றைத் தயாரிப்பார்.

**பிரதான பதங்களும் எண்ணக்கருக்களும்:**

**எண்ணக்கருப்படம் (Concept Map)**

Draft



**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**பிரவேசம்:**

- பாட முன்னறிவை ஞாபகப்படுத்தக்கூடியவாறு பின்வரும் வினாக்களை மாணவர்களிடம் வினாவுவதன் மூலம் கலந்துரையாடலொன்றில் அவர்களை ஈடுபடுத்தவும்.
  - உரிமையாண்மை என்பது யாது?
  - சொத்து என்பது யாது?
  - பொறுப்பு என்பது யாது?
  - உரிமையாண்மையில் மாற்றத்தையேற்படுத்தக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள் எவை?
  - வருமானத்திற்கான உதாரணங்கள் எவை?
  - செலவுகளுக்கான உதாரணங்கள் எவை?
- மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விடைகளினூடாகக் கலந்துரையாடலை விருத்தி செய்து கொடுக்கல் வாங்கல்கள் விரிவடையும் நிலைமைகளின்போது அவற்றை அறிக்கைப்படுத்தி வருமானங்கள் மற்றும் செலவுகளை ஒப்பிடுவதன் மூலம் இலாபம் அல்லது நட்டத்தை அறிந்து கொள்ள முடியும் என்பதனைக் கலந்துரையாடவும்.
- இணைதல் எண்ணக்கருவை விளக்கி அதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடவும்.
- இலாபம் அல்லது நட்டத்தை அறிவதற்கு வருமானக்கூற்றைத் தயாரிக்க வேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்தவும்.
- இலாபம் அல்லது நட்டத்தை நிதிப் பெறுபேறு எனவும் அழைக்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்தவும்.
- கால இறுதியில் சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை என்பவற்றைப் பயன்படுத்தி நிதிநிலைமைக்கூற்றைத் தயாரிக்க முடியும் எனக் கலந்துரையாடவும்.

Draft

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் முதலாவது செயற்பாட்டில் ஈடுபடும் வேளையில் இரண்டாவது செயற் பாட்டில் ஈடுபடச் செய்யவும். பின்னர் மூன்றாவது செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும்.

**செயற்பாடு 01:**

பின்வரும் விடய ஆய்வை உள்ளடக்கிய படிவத்தை குழுக்களிடையே பகிர்ந்தளிக்கவும்.

**படிவம்:**

வடிவேல் வணிகத்தின் 2017.01.01 ஆம் திகதியில் காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் பின்வருமாறு:

| சொத்துக்கள் | ரூபா 000 | பொறுப்புக்கள் | ரூபா 000 |
|---|---|---|---|
| காணி கட்டடம் | 7 000 | வங்கிக்கடன் | 2 500 |
| மோட்டார் வண்டி | 2 000 | கடன்கொடுத்தோர் | 500 |
| சரக்கிருப்பு | 600 | | |
| கடன்பட்டோர் | 300 | | |
| காசு | 100 | | |

ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் பொழிப்பு கீழே காட்டப் பட்டுள்ளது. (ரூபா 000 களில்)

1. உடன் காசுக்கு ரூபா 300 பெறுமானம் கொண்ட பொருட்கள் ரூபா 500க்கு விற்பனை செய்தல்.
2. மோட்டார் வண்டிக்கு மாதாந்தப் பெறுமானத்தேய்வு ரூபா 50 ஆகும்.
3. வடிவேல் ரூபா 400 வணிகத்திற்கு மேலும் ஈடுபடுத்தினார்.
4. ரூபா 400 பெறுமதியான பொருள் ரூபா 600க்கு கடன் விற்பனை செய்தல்.
5. வடிவேல் செய்த பொருள் பற்று ரூபா 100.
6. பழைய பத்திரிகையின் மூலம் பெற்றது ரூபா 10. கொடுத்த கழிவு ரூபா 50 ஆகும்.
7. கடன்பட்டோரிடமிருந்து ரூபா 500 கடனைத் தீர்ப்பதற்காக ரூபா 450 பெறப்பட்டது.
8. கடன்கொடுத்தோருக்கு ரூபா 300 செலுத்தப்பட்டது. பெற்ற கழிவு ரூபா 30 ஆகும்.

மேற்குறிப்பிடப்பட்ட தாக்கங்களை பின்வரும் முறையிலான சமன்பாடொன்றில் ஆரம்ப மீதியுடன் பதிவு செய்வதில் ஈடுபடுத்தவும்.

1. [காணிகட்டடம் + மோட்டார் + சரக்கு + கடன்பட்டோர்] = [வங்கிக்கடன் + கடன்கொடுத்தோர் + உரிமையாண்மை]
2. ஒவ்வொரு நிரல்களினதும் கூட்டுத்தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கவும்.
3. தொடக்கத் திகதியில் உரிமையாண்மைக்கும் (2017.01.01) இறுதித் திகதியில் உரிமையாண்மைக்கும் (2017.01.031) இடையிலான வேறுபாட்டைப் பெறுவதற்காக வழிகாட்டலொன்றைச் செய்யவும்.
4. அவ்வேறுபாட்டில் உள்ளடக்கப்படும் உருப்படிகளைப் பெயரிட்டுக் காட்டுவதில் ஈடுபடச் செய்யவும்.

Draft

- செயற்பாட்டின் இறுதியில் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்திக் குழுத் தேடியறிதல் களை வகுப்பில் முன்வைக்கச் செய்யவும்.
- உரிமையாண்மையின் மாற்றத்தில் ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களை தனித்தனியாக இனங்காண முடியும் என.
    - **பற்று -** உரிமையாளர் வணிகத்திலிருந்து எடுத்துக் கொண்ட பொருள் அல்லது காசு காரணமாக உரிமையாண்மை குறைவடையும் என

      **<u>உதாரணம்:</u>** பொருள் பற்று ரூபா 100 ஆகும்.
    - **மேலதிக மூலதனம் -** உரிமையாளர் வணிகத்தை நடத்திச் செல்லும்போது அவரால் வணிகத்தில் ஈடுபடுத்தப்படும் மேலதிக சொத்துக்கள்

      **<u>உதாரணம்:</u>** வடிவேலு மேலதிகமாக வணிகத்தில் ஈடுபடுத்திய காசு ரூபா 400
    - **வருமானம் -** மேலதிக மூலதனத்தைத் தவிர்த்து உரிமையாண்மை அதிகரிப்ப தற்குக் காரணமாக அமையும் கொடுக்கல் வாங்கல்கள்.

| | | ரூபா |
|---|---|---|
| **<u>உதாரணம்:</u>** | உடன் காசு விற்பனைகள் | 500 |
| | கடனுக்கு விற்பனைகள் | 600 |
| | பெற்ற கழிவு | 30 |
| | பழைய பத்திரிகை விற்பனை | 10 |

* **செலவுகள்** - பற்றுக்கள் தவிர உரிமையாண்மையைக் குறைக்கும் கொடுக்கல் வாங்கல்களாகும்.

**உதாரணம்:**

| | |
|---|---|
| உடன் காசு விற்பனையின்போது | 300 |
| கடன் விற்பனையின்போது | 400 |
| கொடுத்த கழிவுகள் | 50 |
| கடன் வட்டி | 80 |
| ஊழியர் சம்பளம் | 80 |
| மோட்டார் வாகன பெறுமானத்தேய்வு | 50 |

* வருமானங்கள், செலவினங்களை தனித்தனியாக இனங்கண்டு நிதியாண்டினது பெறுபேற்றைக் கணிப்பிட முடியும் எனவும், அது இலாபம் அல்லது நட்டமொன்றாக அமைய முடியும் எனவும் தெளிவுபடுத்தவும்.

**இலாபம் / நட்டம் = வருமானம் - செலவினங்கள்**

* இலாபம் / நட்டத்தைக் கணிப்பிடும்பொழுது வருமானத்தை ஈட்டுவதற்காக மேற்கொண்ட செலவினங்களைச் சீராக்குதல் வேண்டும். அது இணைதல் எண்ணக்கருவாகும் என்பதனைத் தெளிவுபடுத்தவும்.
* அவ்வாறே இலாபம் / நட்டத்தைக் கணிப்பதற்காக வருமானக் கூற்றொன்று தயாரிக் கப்படும் எனவும், அது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கு வழங்கப்படும் எனவும் வெளிப்படுத்தவும்.

Draft

**செயற்பாடு 02:**

* பின்வரும் விடய ஆய்வை உள்ளடக்கிய படிவங்கள் இரண்டைக் குழுக்களுக்கிடையே பகிர்ந்தளிக்கவும்.

**படிவம் 01:**

பிரியன் வணிகத்தின் 2016.01.01 திகதியிலும், 2016.12.31 திகதியிலும் காணப்பட்ட உரிமைகளும், அவற்றில் தாக்கத்தை ஏற்படுத்திய கொடுக்கல் வாங்கல்களுள் சிலவும் பின்வருமாறு: **(ரூபா 000)**

| | |
|---|---|
| 2016.01.01ம் திகதியன்று உரிமையாண்மை | 8 000 |
| 2016.01.31ம் திகதியன்று உரிமையாண்மை | 10 000 |

* பிரியன் வருடத்தில் ரூபா 500 காசும், ரூபா 200 பெறுமதியான பொருளும் வீட்டுப் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டுள்ளன.
* வருட காலத்தில் பிரியனது ரூபா 800 பெறுமதியான மோட்டார் வண்டி வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

(1) தேறிய சொத்துக்களினூடாக பிரியன் வணிகத்தின் 2016 ஆம் ஆண்டின் இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடல்.

**படிவம் 02:**

* மாணவர் குழுக்களுக்கு இவ்விடய ஆய்வை உள்ளடக்கிய படிவத்தைப் பெற்றுக் கொடுக்கவும்.

- சாஜகான் வணிகத்தின் 2016.12.31 ஆம் திகதியில் முடிவடையும் நிதி ஆண்டின் வருமானம் செலவுகளது சுருக்கம் பின்வருமாறு: (ரூபா 000)
   1. ரூபா 4 000 பெறுமதியான சரக்கு ரூபா 6 000த்திற்கு உடன் காசிற்கு விற்பனை செய்தல்.
   2. ரூபா 2 000 பெறுமதியான இருப்பு ரூபா 3 500க்குக் கடனுக்கு விற்பனை செய்தல்.
   3. வருடத்திற்குரிய ஊழியர் சம்பளக் கொடுப்பனவுச் செலுத்துகை ரூபா 300.
   4. கடன்பட்டோரிடமிருந்து கடனை அறவிடும்பொழுது கொடுத்த கழிவு ரூபா 100.
   5. மோட்டார் வண்டிப் பெறுமானத்தேய்வு ரூபா 50.
   6. வணிகத்தின் நிலையான வைப்பிற்காக பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 80.
   7. உபசரணைச் செலவுகள் ரூபா 20.
   8. வருடத்தில் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 40.

(1) மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களை வருமானங்கள் செலவினங்கள் எனும் வகையில் வகைப்படுத்துவதற்கு வழிகாட்டுங்கள்.

(2) சாஜகான் வணிகத்தின் வருமானங்கள், செலவினங்களைச் சீராக்குவதன் மூலம் இலாபம் அல்லது நட்டத்தை கணிப்பதற்கான அட்டவணையொன்றைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கவும்.

- சாஜகான் வணிகத்தின் உதவி கொண்டு குழுத் தேடியறிதல் சந்தர்ப்பத்தின்போதே பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்பவும்.
- வருமானங்கள் செலவினங்களுக்கிடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டமாகும்.
- இலாபம் அல்லது நட்டத்தைச் செயற்பாட்டுப் பெறுபேறு எனும் வகையில் அறிமுகப் படுத்த முடியும்.
- செயற்பாட்டுப் பெறுபேற்றைக் கணிப்பிடுவதற்கு குறித்த காலப்பகுதியொன்றிற்காக அட்டவணையொன்றை தயாரிக்க முடிவதுடன் அது வருமானக்கூற்றாகும் என்பதனை யும் தெளிவுபடுத்தவும்.
- வருமானக்கூற்று பின்வரும் முறையில் தயாரிக்க முடியும் என விளக்கவும்.

**சாஜகான் வணிகத்தின் 2016.12.31ம் திகதியில்**
**முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று**

**(ரூபா 000)**

| | | | |
|---|---|---|---|
| **வருமானங்கள்:** | விற்பனைகள் | | 9 500 |
| | வைப்பு வட்டி | | 80 |
| | | | 9 580 |
| **செலவுகள்:** | விற்பனைக் கிரயம் | 6 000 | |
| | ஊழியர் சம்பளம் | 300 | |
| | கொடுத்த கழிவு | 100 | |
| | மோட்டார் வண்டிப் பெறுமானத்தேய்வு | 50 | |
| | உபசரணைச் செலவுகள் | 20 | |
| | மின்சாரச் செலவுகள் | 40 | (6 510) |
| | தேறிய இலாபம் | | 3 070 |

Draft

**செயற்பாடு 03:**

- செயற்பாடு 02 இறுதியின்போது இந்நிதிக்கூற்று உள்ளடக்கிய படிவத்தை குழுக் களிடையே பகிர்ந்தளிக்கவும்.
- ஒவ்வொரு குழுக்களுக்கும் கிடைக்கப் பெற்ற படிவத்தினூடாக செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும்.

**படிவ இலக்கம் 01:**

சஞ்சீவன் வணிகத்தின் 2016.12.31ம் திகதியின் நிதிநிலைமைக்கூற்றின் தகவல்கள் கீழே தரப்பட்டள்ளது.

**(ரூபா 000)**

| | | | |
|---|---|---|---|
| **உரிமையாண்மை** | | **சொத்துக்கள்** | |
| 2016.01.01 மூலதனம் | 40 000 | காணிகட்டடம் | 18 000 |
| 2016.12.31 ஆண்டின் தேறிய இலாபம் | 2 000 | உபகரணம் | 12 000 |
| 2016.12.31ம் திகதியன்று உரிமை | ......... | சரக்கிருப்பு | 3 000 |
| **பொறுப்புக்கள்** | | கடன்பட்டோர் | 7 000 |
| வங்கிக்கடன் | 2 000 | காசுமீதி | 5 000 |
| கடன்கொடுத்தோர் | .......... | | |
| | ............. | | ............. |

(1) இடைவெளிகளுக்குரிய எண்ணிக்கையைக் குறிப்பிடுவதற்கு ஆலோசனை வழங்க வும்.

(2) இவ்வட்டவணையை வேறொரு மாதிரியின் மூலம் முன்வைப்பதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்கவும்.

**படிவ இலக்கம் 02:**

**நித்திலா வணிகத்தின் 2016.12.31ம் திகதியில்**
**உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று**

**(ரூபா 000)**

| | | |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காணி | | 16 000 |
| கட்டடம் | | 12 000 |
| சரக்கிருப்பு | | 4 000 |
| கடன்பட்டோர் | | 3 000 |
| காசு | | ......... |
| **உரிமையாண்மை** | | |
| 2016.01.01ம் திகதியன்று மூலதனம் | 25 000 | |
| நிதியாண்டு தேறிய இலாபம் | 7 000 | |
| 2016.01.31ல் உரிமை | | ......... |
| **பொறுப்புக்கள்** | | |
| கடன்கொடுத்தோர் | | 5 000 |
| உரிமையும் மொத்த பொறுப்புக்களும் | | ......... |

Draft

(1) இடைவெளிகளுக்குரிய எண்ணிக்கையைக் காட்டுவதற்கு ஆலோசனை வழங்கல்.

(2) இவ்வட்டவணையை மற்றுமோர் மாதிரி அமைப்பில் முன்வைத்தல்.

(3) தேடியறிதல்களை வகுப்பிற்கு முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

**பாடவிடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான வழிகாட்டல்கள்:**

- மாணவர்கள் குழுத் தேடியறிதல்கள் செய்யும் சந்தர்ப்பத்தின்போதே பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு விளக்கமொன்று வழங்கி கலந்துரையாடலில் ஈடுபடவும்.
- வணிகமொன்றில் குறிப்பிட்ட திகதியில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை வெளிப்படுத்தக்கூடிய அட்டவணையே **‘நிதிநிலைமைக்கூற்று’** என்பதைத் தெளிவுபடுத்தவும்.
- வணிகத்தினது அக்கறையுடைய கட்சியினருக்குத் தகவல்களை வழங்குவதற்காகத் தயாரிக்கப்படும் ஒரு நிதிக்கூற்றே நிதிநிலைமைக் கூற்றாகும்.
- வணிகமொன்றின் உரிமையாளர்களினால் ஈடுபடுத்தப்படும் மூலதனத்திற்கு இலாபம்/ நட்டத்தையும் பற்றையும் சீராக்கியதன் பின்னர் கிடைக்கும் பெறுமானமே **‘உரிமை யாண்மை’** யாகும் என்பதைக் கலந்துரையாடவும்.
- நிதிநிலைமைக்கூற்றொன்றை கணக்கீட்டுச் சமன்பாட்டின் துணையோடும் தயாரிக்க முடியும் என்பதை விளக்கவும்.

Draft

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

(1) பின்வரும் பதங்களைப் பொருத்தமான இடங்களுக்கு இட்டு சொற்றொடரைப் பூரணப்படுத்தவும்.

**(இணைதல் எண்ணக்கரு, வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று, தேறிய சொத்துக்கள், இலாபம் / நட்டம்)**

(i) குறிப்பிட்ட நிதியாண்டிறுதியில் நிதிப் பெறுபேற்றைக் கணிப்பிடுவதற்காக ........................................ தயாரிக்கப்படும்.

(ii) குறித்த காலவரையறையுள் உழைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பதற்காக வருமானங்களுடன் அவற்றை ஈட்டுவதற்காக மேற்கொண்ட செலவுகளைத் தொடர்புபடுத்துவது ..........................விற்கு அமைவாகவாகும்.

(iii) வணிகமொன்றில் குறித்த திகதியில் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை யாண்மை என்பவற்றைக் காட்டும் அட்டவணை ...................................... என அழைக்கப்படும்.

(iv) வருமானக்கூற்றின் பிரதான நோக்கம் வணிகமொன்றின் குறித்த கால வரையொன்றிற்காக .................................... கணிப்பிடுதலாகும்.

(v) வணிகமொன்றின் உரிமையாண்மை ........................................... எனவும் அழைக்கப்படும்.

(2) ராணியினால் நடத்திச் செல்லப்படும் சில்லறை வியாபார வணிகத்தின் 2017 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளைப் பின்வரும் மாதிரி அமைப்பின் கீழ் கணக்கீட்டுச் சமன்பாட்டில் உட்படுத்தவும்.

| | சொத்துக்கள் | | | | = | பொறுப்புக்கள் | + | உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொ. இல | காணி கட்டடம் + | சரக்கு + | கடன் பட்டோர் + | வங்கி | = | வங்கிக் கடன் + | கடன் கொடுத்தோர் + | உரிமை |
| (i) | ............ | +80 000 | ........... | -80 000 | = | .......... | .................... | ............... |
| (ii) | ............ | -150 000 | +250 000 | ........... | = | .......... | .................... | +100 000 |
| (iii) | ............ | ............. | -30 000 | +28 000 | = | ........... | .................... | -2 000 |
| (iv) | ............ | ............. | ............... | -1 000 000 | = | ........... | ................... | ................ |
| (v) | ................ | ............. | ............... | -36 000 | = | ........... | -40 000 | + 4 000 |
| (vi) | ................ | ............. | ............... | -15 000 | = | -12 000 | ................... | - 3 000 |
| (vii) | ................ | -8 000 | .............. | ................ | = | ........... | ................... | - 8 000 |
| (viii) | -10 000 | .............. | .............. | ................ | = | ........... | ................... | - 10 000 |
| (ix) | +1 000 000 | ............. | .............. | +12 000 000 | = | ........... | .................. | +12 000 000 |
| (x) | ................ | - 2 000 | ............. | ............... | = | ........... | ................. | -2 000 |
| (xi) | ................ | +40 000 | ............. | ............. | = | ........... | +40 000 | ------------ |
| (xii) | ................ | ............ | ............. | -12 000 | = | ........... | .................. | - 12 000 |

Draft

**மேலதிகத் தகவல்கள்:**

(அ) இலக்கம் 07, 09 ஆகிய கொடுக்கல் வாங்கல்கள் இலாபத்தில் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

(ஆ) 2017.01.01ம் திகதியில் வணிகத்தில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் பின்வருமாறு இருந்தன.

| | ரூபா |
|---|---|
| காணி கட்டடம் | 1 000 000 |
| சரக்கிருப்பு | 200 000 |
| கடன்பட்டோர் | 900 000 |
| காசுமீதி | 280 000 |
| வங்கிக்கடன் | 180 000 |
| கடன்கொடுத்தோர் | 70 000 |

(1) மேற்குறிப்பிடப்பட்ட மாதிரியில் காணப்படும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வையும் விபரிக்கவும்.

(2) 2017 ஜனவரி மாதத்திற்காக வருமானக் கூற்றினைத் தயாரித்தல்.

(3) 2017 ஜனவரி 31ம் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்றினைத் தயாரித்தல்.

(3) பின்வரும் கூற்றுக்களிலிருந்து பிழையான கூற்றுக்களைத் தெரிவு செய்யவும்.

(i) நிதிநிலைமைக் கூற்றின் மூலம் குறிப்பிட்ட திகதிக்குரிய நிதிசார் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை என்பன சுட்டிக் காட்டப்படும்.

(ii) தேறிய சொத்து முறையில் இலாபத்தைக் கணிப்பிடும்பொழுது பற்றுக்கள் கழிக்கப்படல் வேண்டும்.

(iii) வருமானக் கூற்றொன்றின் அடிப்படை நோக்கம் நிதிப்பெறுபேற்றைக் கணிப் பிடுவதாகும்.

(iv) கணக்கீட்டுச் சமன்பாட்டின் கூறொன்றான உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களின் உதவியுடன் வருமானக்கூற்றைத் தயாரிக்க முடியும்.

(v) வருமானக்கூற்றில் தகவல்கள் நிதிநிலைமைக்கூற்றினைத் தயாரிப்பதற்குக் கட்டாயமாகத் தேவையற்றதாக இருக்கும்.

(4) பின்வரும் கூற்றுக்கள் உண்மையாக இருப்பின் (√) அடையாளத்தையும், பிழையாக இருப்பின் (×) அடையாளத்தையும் கூற்றின் முன்னால் காட்டவும்.

(1) கணக்கீட்டுச் சமன்பாட்டின் மூலம் வணிகமொன்றின் சொத்துக்களுக்கும் உரிமைக்குமிடையே காணப்படும் தொடர்புகள் வெளிப்படுத்தப்படும். (..........)

(2) தேறிய சொத்து முறையில் இலாபத்தை அல்லது நட்டத்தை கணிப்பிடும் பொழுது இறுதி தேறிய சொத்துக்களிலிருந்து ஆரம்பத் தேறிய சொத்துக் களை குறைக்கப்படலும் பற்றுக்கள், மேலதிக மூலதனம் என்பவை கழிக்கப் படலும் வேண்டும். (..........)

(3) வருமானக்கூற்றைத் தயாரிக்கும் பொழுது இணைதல் எண்ணக்கரு பயன் படுத்திக் கொள்ளப்படும். (..........)

(4) வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டில் தாக்கம் செலுத்தும் முறை யைப் பதிவு செய்ததன் பின்னர் அதனூடாக நிதிநிலைமைக்கூற்றைத் தயாரிக்க முடியும். (..........)

(5) காசுப்பற்று, மேலதிக மூலதனம் என்பன இலாபத்தில் அல்லது நட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். (..........)

| **பிரதான பதங்கள்** | මූලික පද | **Key terms** |
|---|---|---|
| அக்கறையுள்ள தரப்பினர் | ඇල්මැති පාර්ශ්වයන් | Stake holders |
| வருமானக்கூற்று | ආදායම් ප්‍රකාශනය | Income statement |
| நிதிநிலைமைக்கூற்று | මූල්‍ය තත්ත්ව ප්‍රකාශනය | Statement of financial position |
| நடைமுறைச் சொத்துக்கள் | ජංගම වත්කම් | Current assets |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | ජංගම නොවන වත්කම් | Non -current assets |
| விற்பனைக் கிரயம் | විකුණුම් පිරිවැය | Cost of sales |
| இணைதல் எண்ணக்கரு | ගැලපුම් සංකල්පය | Matching concept |

Draft

| | |
|---|---|
| **தேர்ச்சி 3.0:** | **இரட்டைப்பதிவு முறைமைக்கமைய கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளைக் கணக்குகளில் பதிவு செய்வார்.** |
| **தேர்ச்சி மட்டம் 3.1:** | **கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளைப் பதிவு செய்யும் போது இரட்டைப் பதிவு விதியினைப் பின்பற்றுவதற்கான முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவார்.** |
| **3.2:** | **வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளைக் கணக்கு களில் பதிவு செய்வார்.** |
| **பாடவேளைகள்:** | 12 |

**கற்றற் பேறுகள்:**

- கொடுக்கல் வாங்கலொன்றின் இரட்டை விளைவினை விளக்குவார்.
- இரட்டைப் பதிவு முறையின் ஆரம்பத்தையும், இரட்டைப் பதிவு முறையினையையும் தெளிவுபடுத்துவார்.
- இரட்டைப்பதிவு விதியினை முன்வைப்பார்.
- கணக்கினையும் அதன் மாதிரி அமைப்பையும் தெளிவுபடுத்துவார்.
- பேரேடுகளை வகைப்படுத்திக் காட்டுவார்.
- பேரேட்டுக் கணக்கு வகைகளைப் பெயரிட்டுக் காட்டுவார்.
- நிதிக் கூற்றுக்களின் கூறுகளைப் பெயரிட்டுக் காட்டுவார்.
- கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகளை இரட்டை விளைவு விதிக்கேற்பக் கணக்குகளில் பதிவு செய்வார்.

Draft

**பிரதான பதங்களும் எண்ணக்கருக்களும்:**

**எண்ணக்கருப்படம் (Concept Map)**



**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**பிரவேசம்:**

- வணிகத்தின் பயன்பாட்டிற்காக ரூபா 25 000 பெறுமதியான தளபாட உபகரணங்களின் கடன் கொள்வனவு எனும் கொடுக்கல் வாங்கலை மாணவர்களுக்கு முன்வைத்து அதன் இரட்டை விளைவு தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்து பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.
- தளபாட உபகரணங்கள் கடனுக்குக் கொள்வனவு செய்ததன் காரணமாக தளபாட உபகரணச் சொத்து அதிகரித்து அதற்குச் சமமான பெறுமானத்தில் பொறுப்பின் அளவும் அதிகரிக்கும்.
- இக்கொடுக்கல் வாங்கலின் காரணமாக வணிகத்தின் வளங்களில் மாற்றமொன்று ஏற்பட்டுள்ளது.
- அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் இரட்டை விளைவுகள் காணப்படுவதுடன் அவ்விரட்டை விளைவுகளைக் கணக்குகளில் பதிவு செய்ய வேண்டும்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**

Draft

- வகுப்பு மாணவர்களை நான்கு குழுக்களாக வகைப்படுத்திப் பின்வரும் தலைப்புக் களிலிருந்து ஒவ்வொரு குழுக்களுக்கும் கிடைக்கும் தலைப்புக்கள் மீதும் அவதானஞ் செலுத்திப் பின்வரும் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு வழிகாட்டவும்.

| | |
|---|---|
| முதலாவது குழுவின் தலைப்பு: | சொத்துக்களும் பொறுப்புக்களும் |
| இரண்டாவது குழுவின் தலைப்பு: | சொத்துக்களும் செலவுகளும் |
| மூன்றாவது குழுவின் தலைப்பு: | மூலதனமும் சொத்துக்களும் |
| நான்காவது குழுவின் தலைப்பு: | சொத்துக்களும் வருமானங்களும் |

- குழுக்களுக்குக் கிடைத்த தலைப்பினை இனங்காண்பதற்கு ஆலோசனை வழங்கவும்.
- கிடைத்த தலைப்பிற்கமைய வணிகமொன்றில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் தலா நான்கு வீதம் குழுக் கலந்துரையாடல் மூலம் வெளிப்படுத்தச் செய்யுங்கள்.
  - அக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய இரட்டை விளைவினை பெறுமானம் குறைதல், அதிகரித்தல் என்ற வகையில் இனங்கண்டு எழுதுவதற்கு மாணவர்களை ஈடுபடுத்த வும்.
- அவ்விரட்டைத் தன்மையை இனங்காணும் பொழுது பின்வரும் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை அடிப்படையாகக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கவும்.

அதிகரிப்பு - வரவு < சொத்துக்கள் / செலவுகள் > குறைதல் - செலவு

அதிகரிப்பு - செலவு < பொறுப்புக்கள் / வருமானம் / உரிமையாண்மை > குறைதல் - வரவு

- இனங்காணப்பட்ட இரட்டை விளைவினை பின்வரும் மாதிரியில் பதிவு செய்வதற்கு வழிகாட்டவும்.

**உதாரணம்:**

| கொடுக்கல் வாங்கல் | இரட்டை விளைவு | இரட்டைப்பதிவு |
|---|---|---|
| ரூபா 100 000 வங்கிக்கடன் பெறல். | 1. சொத்து அதிகரிப்பு<br>2. பொறுப்பு அதிகரிப்பு | 1. காசுக்கணக்கு - வரவு<br>2. வங்கிக்கடன் கணக்கு - செலவு |

- தயாரித்த இரட்டைப்பதிவு அட்டவணையை விளக்கி, கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவினை பேரேட்டுக் கணக்குகளில் பிரதி செய்வதில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.

**பாடவிடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான வழிகாட்டல்கள்:**

- அனைத்து வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளுக்கும் இரட்டை விளைவுகள் காணப்படுகின்றன.
- கணக்கீட்டு அலகொன்றில் ஏற்படும் நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரியே ''கணக்கு'' எனப்படும். இங்கு வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது இரட்டைத் தாக்கமானது குறித்த திகதியிலிருந்து மற்றோர் குறித்த திகதி வரையில் தொடர் ஒழுங்கு முறைப்படி அறிக்கைப்படுத்தப்படும்.
- கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவானது வணிகத்தின் மீது இரு முறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும், அத்தாக்கத்தை ஒரே தடவையில் வரவு, செலவு என கணக்குகளில் பதிவு செய்யும் முறையே இரட்டைப் பதிவு முறை எனப்படும்.
- கொடுக்கல் வாங்கலொன்றின் இரட்டை விளைவே இரட்டைப் பதிவுத் தத்துவமாக இருப்பதுடன், இவ்விதி கி.பி. 1494 ஆம் ஆண்டில் இத்தாலி நாட்டைச் சேர்ந்த **'லூகா பசியோலி'** (Luca pacioli) என்பவரினால் முன்வைக்கப்பட்டது.
- அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களிலும் இரட்டை விளைவை கணக்குகளில் தாக்கல் செய்யவேண்டிய முறையானது இரட்டைப் பதிவுத் தத்துவத்தின் மூலம் குறிப்பிடப்படுவதுடன் அவ் இரட்டை விளைவுகள் வரவு, செலவு எனும் வகையில் ஒரே தடவையில் பதிவு செய்வதற்குப் பின்பற்றப்படும் சட்டதிட்டங்களின் தொகுதி இரட்டைப் பதிவுத் தத்துவம் எனப்படும்.
- அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக சொத்துக்கள், பொறுப்புக்கள் உரிமையாண்மையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு அல்லது குறைவானது கணக்கீட்டில் வரவாகப் பதியப்பட வேண்டியது. அதிகரிப்பிற்கா அல்லது குறைவிற்கா என்பதனை இரட்டைப் பதிவு விதி மூலம் வழிகாட்டப்படும்.
- பாரம்பரிய பேரேட்டுக் கணக்கொன்றின் மாதிரி அமைப்பானது ஆங்கில எழுத்தாகிய 'T' எழுத்தின் வடிவத்தை எடுப்பதுடன் பயன்பாட்டின்போது அதற்காகப் பின்வரும் கணக்கின் மாதிரி பயன்படுத்தப்படும்.

**கணக்கின் மாதிரி அமைப்பு - 01**

**............... கணக்கு**

| **வரவு** | **செலவு** |
|---|---|
| | |

Draft

**கணக்கின் மாதிரி அமைப்பு - 02**

**............................ கணக்கு**

**வரவு** **செலவு**

| திகதி | விபரம் | பே. ப. | தொகை (ரூபா) | திகதி | விபரம் | பே. ப. | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**கணக்கின் மாதிரி அமைப்பு - 03**

**............................ கணக்கு**

| திகதி | விபரம் | பே. ப. | வரவு (ரூபா) | செலவு (ரூபா) | மீதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | | | | | |

Draft

- கணக்குகள் அனைத்தும் பேணப்படும் இடம் **'பேரேடு'** எனப்படும். அது புத்தக மொன்றாகவோ, கோவையொன்றாகவோ, இலத்திரனியல் ஆவணமொன்றாகவோ, அட்டையொன்றாகவோ இருக்கலாம்.

  **உதாரணம்:** கணினிமயப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள் காந்த நாடாவில் (Magnatic Tape) பதிவு செய்தல்.

- வணிகக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் உருவாகின்ற கணக்கு வகைகள் ஐந்து வகையாகும். அதாவது சொத்து, செலவு, பொறுப்பு, வருமான, உரிமைக் கணக்குகளே அவையாகும்.

- ஒவ்வொரு கணக்குகளிலும் பெறுமானங்கள் குறைதல் அல்லது அதிகரித்தலை பின்வருமாறு பொழிப்பாக்கிக் காட்டமுடியும்.

**சொத்துக்கள், செலவுகள் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| பொதுவான மீதி அதிகரிப்பு + | | குறைதல் – | |

**மூலதனம், வருமானம், பொறுப்புக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| குறைதல் – | | பொதுவான மீதி அதிகரிப்பு + | |

- நிதிக்கூற்றுக்களின் கூறுகள் எனப்படுபவை சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை யாண்மை, வருமானம், செலவினம் எனும் தகவல்களாகும்.

- கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளின் விளைவுகளை அறிக்கைப்படுத்தும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவுகள், உரிமைக்கணக்குகள், என்பன **நிதிக்கூற்றுக்களின் அடிப்படைகள்** எனக் குறிப்பிடப்படும் என்பதனை விபரிக்கவும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

(1) உரிய இடைவெளிகளைப் பூரணப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கவும்.

| கொடுக்கல் வாங்கல்கள் | இரட்டை விளைவு விதி | இரட்டைப் பதிப்பு |
|---|---|---|
| 1. உரிமையாளர் வணிகத்தை ஆரம்பிப்பதற்கு ரூபா 200 000 இடல். | சொத்து அதிகரிப்பு - வரவு<br>உரிமை அதிகரிப்பு - செலவு | காசுக்கணக்கு - வரவு 200 000<br>மூலதனக்கணக்கு - செலவு 200 000 |
| 2. தளபாடக் கொள்வனவு ரூபா 250 000. | ..................<br>.................. | ..................<br>.................. |
| 3. காசுக்குப் பொருள் கொள்வனவு ரூபா 60 000 | ..................<br>.................. | ..................<br>.................. |
| 4. காசு விற்பனை ரூபா 100 000 | ..................<br>.................. | ..................<br>.................. |
| 5. தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது ரூபா 6 000 | ..................<br>.................. | ..................<br>.................. |
| 6. கடனுக்குப் பொருள் கொள்வனவு ரூபா 30 000 | ..................<br>.................. | ..................<br>.................. |
| 7. கடனுக்குப் பொருள் விற்பனை ரூபா 40 000 | ..................<br>.................. | ..................<br>.................. |
| 8. கடன்கொடுத்தோருக்குக் காசு செலுத்தியது ரூபா 20 000 | ..................<br>.................. | ..................<br>.................. |
| 9. கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூபா 22 000 | ..................<br>.................. | ..................<br>.................. |
| 10. கிடைத்த வாடகை வருமானம் ரூபா 72 000 | ..................<br>.................. | ..................<br>.................. |
| 11. பெற்ற வங்கிக்கடன் ரூபா 100 000 | ..................<br>.................. | ..................<br>.................. |
| 12. உரிமையாளர் சொந்தத் தேவைக்காகப் வணிகத்திலிருந்து ரூபா 5 000வை பற்றுதல். | ..................<br>.................. | ..................<br>.................. |

Draft

1. மேலே குறிப்பிடப்பட்ட இரட்டைப் பதிவு நிரலில் உள்ள பதிவுகளை பேரேடுகளுக்கு மாற்றுதல்.
2. பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்துதல்.
3. அக்கணக்குகளை நிதிக்கூற்றுக்களின் அடிப்படைகளுக்கேற்ப வகைப்படுத்திக் காட்டுக.

(2) வணிக நிறுவனமொன்றில் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை பதிவுகள் கீழே தரப்பட்டுள்ளன. இம்மாற்றங்களைக் கருத்திற்கொண்டு அதனுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களைப் பெயரிட்டுக் காட்டுக.

| **இரட்டைப் பதிவு** | | **கொடுக்கல் வாங்கல்கள்** |
|---|---|---|
| 1. காசுக் கணக்கு வரவு<br>மூலதனக் கணக்கு செலவு | ரூபா 300 000<br>ரூபா 300 000 | ..........................................<br>.......................................... |
| 2. மோட்டார் வாகனக் கணக்கு வரவு<br>மூலதனக் கணக்கு செலவு | ரூபா 150 000<br>ரூபா 150 000 | ..........................................<br>.......................................... |
| 3. காசுக் கணக்கு வரவு<br>வங்கிக் கடன் கணக்கு செலவு | ரூபா 20 000<br>ரூபா 20 000 | ..........................................<br>.......................................... |
| 4. கொள்வனவுக் கணக்கு வரவு<br>காசுக்கணக்கு செலவு<br>கடன்கொடுத்தோர் கணக்கு செலவு | ரூபா 50 000<br>ரூபா 30 000<br>ரூபா 20 000 | ..........................................<br>..........................................<br>.......................................... |
| 5. மின்சாரக் கட்டணக் கணக்கு வரவு<br>காசுக் கணக்கு செலவு | ரூபா 8 000<br>ரூபா 8 000 | ..........................................<br>.......................................... |
| 6. கடன்பட்டோர் கணக்கு வரவு<br>விற்பனைச் செலவு | ரூபா 20 000<br>ரூபா 20 000 | ..........................................<br>.......................................... |
| 7. கடன்கொடுத்தோர் கணக்கு வரவு<br>காசுக் கணக்கு செலவு | ரூபா 20 000<br>ரூபா 20 000 | ..........................................<br>.......................................... |
| 8. காசுக் கணக்கு வரவு<br>கொடுத்த கழிவு வரவு<br>கடன்பட்டோர் கணக்கு செலவு | ரூபா 8 000<br>ரூபா 2 000<br>ரூபா 10 000 | ..........................................<br>..........................................<br>.......................................... |
| 9. பற்றுக்கணக்கு வரவு<br>கொள்வனவுக் கணக்கு செலவு | ரூபா 6 000<br>ரூபா 6 000 | ..........................................<br>.......................................... |
| 10. மின்சாரக் கட்டணக் கணக்கு வரவு<br>செலுத்தவேண்டிய மின்சாரக்<br>கட்டணக் கணக்கு செலவு | ரூபா 1 500<br><br>ரூபா 1 500 | ..........................................<br><br>.......................................... |

Draft

(3) இரட்டைவிளைவு விதியைச் சரியாகக் காட்டாத கூற்றைச் சுட்டிக் காட்டுங்கள்.

(i) சொத்து, செலவு அதிகரிப்பு வரவு

(ii) பொறுப்பு, உரிமை, வருமானம் அதிகரிப்பு செலவு

(iii) சொத்து, செலவு குறைவு வரவு

(iv) பொறுப்பு, உரிமை, வருமானம் குறைவு வரவு

(v) பொறுப்பு, செலவு குறைவு செலவு

(4) கொடுக்கல் வாங்கல்களுக்குரிய இரட்டைப்பதிவைச் சரியாகக் காட்டியுள்ள கூற்றைக் கோடிட்டுக் காட்டவும்.

| | | |
|---|---|---|
| (1) காசுக்குப் பொருள் கொள்வனவு ரூபா 20 000 | - கொள்வனவுக் க/கு | வரவு |
| | - காசுக் க/கு | செலவு |
| (2) கடனுக்குப் பொருள் கொள்வனவு ரூபா 30 000 | - இருப்புக் க/கு | வரவு |
| | - கடன்கொடுத்தோர் க/கு | செலவு |
| (3) உடன் காசுக்கு விற்பனை ரூபா 30 000 | - விற்பனைக் க/கு | வரவு |
| | - இருப்புக் க/கு | செலவு |
| (4) கடன் விற்பனை ரூபா 40 000 | - விற்பனைக் க/கு | வரவு |
| | - கடன்பட்டோர் க/கு | செலவு |
| (5) தொலைபேசிக் கட்டணப் பட்டியல் | - தொலைபேசிக்கட்டணக் க/கு | வரவு |
| கிடைத்தது ரூபா 2 000 | - காசுக் க/கு | செலவு |

Draft

(5) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா/பொய்யா என்பதனைக் குறிப்பிடுங்கள்.

(1) இரட்டைப் பதிவுக் கணக்கீட்டின் தந்தை லூகா பசியோலி ஆவார். (...........)

(2) கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளின் இரட்டை விளைவு கணக்குகளில் இரட்டைப்பதிவு விதிக்கமையவே பதிவு செய்யப்படும். (...........)

(3) உரிமை தொடர்பான இரட்டை விளைவு விதியும் பொறுப்புத் தொடர்பான இரட்டை விளைவு விதியும் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டதாகும். (...........)

(4) பொருள் பற்றுதலானது உரிமையாண்மையைக் குறைக்கும். (...........)

(5) நிதியாண்டொன்றின் உழைக்கப்பட்ட தேறிய இலாபமானது உரிமையாளரின் உரிமையாண்மையில் மாற்றத்தை ஏற்படுத்தாது. (...........)

(6) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவு விதியையும் இரட்டைப் பதிவினையும் குறிப்பிட்டுக் காட்டுங்கள்.

**லோசனின் வணிகம் - 2017 ஜனவரி மாதம்**

| கொடுக்கல் வாங்கல் | இரட்டை விளைவு | இரட்டைப்பதிவு |
|---|---|---|
| **உதாரணம்:** லோசன் வணிக மொன்றை ஆரம்பிப்ப தற்கு அதில் காசாக ரூபா 500 000 இடல். | சொத்து அதிகரிப்பு - வரவு<br>உரிமை அதிகரிப்பு - செலவு | காசுக்க/கு வரவு ரூபா 500 000<br>மூலதனக்க/கு செலவு ரூபா 500 000 |
| 1. அமிர்தா வணிகத் திடமிருந்து கடனுக் குச் சரக்குக் கொள்வனவு ரூபா 80 000. | | |
| 2. வணிகத்தின் பயன் பாடு கருதி அலுவலக உபகர ணக் கொள்வனவு ரூபா 150 000. | | |
| 3. வங்கியிடமிருந்து பெற்ற கடன் ரூபா 200 000. | | |
| 4. காசு விற்பனை ரூபா 100 000. | | |
| 5. பணியாளர் சம்பளக் கொடுப்பனவு ரூபா 10 000. | | |

Draft

மேற்காட்டிய லோசனது வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக் கணக்கு களுக்குத் தாக்கல் செய்வார்.

| **பிரதான பதங்கள்** | **මූලික පද** | **Key terms** |
|---|---|---|
| இரட்டைப் பதிவு முறைமை | ද්විත්ව සටහන් ක්‍රමය | Double entry system |
| கணக்கு | ගිණුම | Account |
| கணக்கீட்டின் வகைகள் | ගිණුම් වර්ග | Types of accounting |
| பேரேடு | ලෙජරය | Ledger |
| இரட்டை விளைவு | ද්විත්ව බලපෑම | Dual aspect / affect |
| நிதிக்கூற்றின் கூறுகள் | මූල්‍ය ප්‍රකාශන මූලිකාංග | Elments of financial statements |